பக்கங்கள் 27

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 18 திங்கட்கிழமை 01.07.2024 அதிர்வு 335

## எரிபொருள்களின் விலைகள் குறைப்பு

இலங்கையில் நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இலங்கை கனியவளக் கூட் 03



## தமிழருக்குத் தீர்வு வேண்டி ஓயாது குரல் கொடுத்த

# சம்பந்தன் காலமானார்!

(அரியகுமார் யசீகரன்)

தமிழினத்தின் விடுதலைக்காக - தமிழர்களின் உரிமைகளுக்காக - தமிழ் மக்களின் நிரந்தர அரசியல் தீர்வுக்காக ஓயாது குரல் கொடுத்த - அயராது பாடுபட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் இலங் கைத் தமிழரசுக் கட்சியின் பெருந்த லைவரும் திரு கோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இராஜவரோதயம் சம்பந்தன் நேற்று இரவு 11 மணியளவில் காலமானார் என்பதை 'முரசு' ஆழ்ந்த துயரத்துடன் அறியத்தருகின்றது. 03

## எந்தத் தேர்தலுக்கும் எந்நேரமும் தயார்

### கண்டியில் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவிப்பு



"ஐக்கிய மக்கள் சக்தி பொதுமக்க ளுடன் இருப்பதால் தேர்தல் நடத்தும் நேரம் எமக்கு முக்கியமில்லை. எந்தத் தேர்தலுக்கும், எந்தச் சந்தர்ப்பத்திலும் தயார். ஐக்கிய மக்கள் சக்தியை விட்டு விட்டு எவரும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைய மாட்டார்கள். ஜனாதிபதிக்கு அந்த முயற்சி ஒரு கனவே. ஜனாதிப தியோ அல்லது வேறு யாரோ என்ன சொன்னாலும், ஐக்கிய மக்கள் 02




நேற்றிரவு நம்மை விட்டுப் பிரிந்த தமிழ ரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந் தனின் இறுதிக் கிரி யைகள் அவரது திரு கோணமலை மண் ணில் நடைபெற இருக் கின்றன.

எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்கிய இரா.சம்பந்தன் இறக்கும் போதும் திருகோணமலை நாடாளு மன்ற உறுப்பினர். ஆகையினால் அவரது பூதவுடல் நாடாளுமன் றத்திற்கு எடுத்துவரப்பட்டு, அங்கு வைத்து அஞ்சலியும் மரியாதையும் செய்யப்பட வேண்டும் என்று கோரப் பட்டுள்ளது. அதற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன என்றும் தெரி கின்றது.

நாளையும் நாளை 03









**எந்தத்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தி 220 இலட்சம் மக்களுக்குமான தமது சேவைகளை முன்னெடுத்து வருகின்றது."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

"நாட்டை ஏமாற்றுவதற்கும், நாட்டு மக்களுக்கு பொய்யுரைப்பதற்குமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜுலை 2 ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டியுள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து செயற்படும். எமது ஆட்சியின்போது இங்கு எட்டப்படும் இணக்கப்பாடு மக்களை மையமாகக் கொண்ட, சமூகத்துக்குத் தீங்கு விளைவிக்காத மனிதாபிமான முற்போக்கான இணக்கப்பாடாக அமையும். இது சாதாரண மக்களை ஒடுக்கும் இணக்கப்பாடாக அமையாது. மக்களை வெற்றி பெறச் செய்யும் உடன்பாடாக அமையும்." – என்றும் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்.

"நாடே வங்குரோத்தடைந்துள்ள நேரத்தில், குறிப்பிட்ட சிறிய தரப்பினரே வங்குரோத்தான கருத்துக்களைக் கொண்டுள்ளனர். பிரபஞ்சம், மூச்சுத் திட்டங்கள் என்பன வெளிப்படைத் தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உயரிய பட்சமாக பேணியே எவ்வேளையும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இயலாமையோடு வெறும் வாய் சொல்லால் வீராப்பு பேசி வரும் தரப்பினரே இந்த வேலைத்திட்டங்களை கண்டு விமர்சித்து வருகின்றனர்." – என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று கண்டிக்கு விஜயம் செய்து, மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களின் மகநாயக்க தேரர்களைச் சந்தித்து ஆசிர்வாதம் பெற்றுக்கொண்டார். முதலில் மல்வத்து விகாரைக்குச் சென்ற எதிர்க்கட்சித் தலைவர் மல்வத்து பீட மகாநாயக்க வண. திப்படுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார். அதன் பின்னர், அஸ்கிரி மகா விகாரைக்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர், அஸ்கிரி பீடத்தின் மகாநாயக்க வண. வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரரையும் சந்தித்து ஆசிர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆற்றிவரும் சேவைகள் தொடர்பாக மல்வத்து மற்றும் அஸ்கிரிய மகா நாயக்க தேரர்களைத் தெளிவூட்டும் முகமாகவே இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறினார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மறுதினமும் நாடாளுமன்றம் விசேட விவாதத்திற்காகக் கூடுகின்றது. வழமையாக நாடாளுமன்ற அமர்வு நாள்களில் அரசியல் தலைவர்களின் பூதவுடலை எடுத்து வந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நாடாளுமன்றத்தில் நடைபெறுவதில்லை.

அவசரம் - அவசியம் - என்றால் நாடாளுமன்ற அமர்வு தினத்தில், அமர்வு வேளைக்குப் பின்னர், பூதவுடலை எடுத்து வந்து அஞ்சலி செலுத்த முடியும்.

எனினும் நாளையும் மறு தினமும் மாலை வரை விவாதம் நடைபெற வாய்ப்பு இருப்பதால், அச்சமயம் சம்பந்தனுக்கான அஞ்சலி நிகழ்வை அங்கு நடத்தக் கூடியதாக இருக்காது என்று கருதப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் பிரமுகர் சுமந்திரன் எம்.பி. நேற்றிரவு சம்பந்தன் காலமான சமயம் யாழ்ப்பாணத்தில் நின்றார். விடயம் அறிந்ததும் அவர் கொழும்புக்கு விரைகின்றார். இன்று முற்பகல் அவர் சபாநாயகரை நேரில் சந்தித்து, நாடாளுமன்ற அஞ்சலி நிகழ்வு குறித்து முடிவெடுப்பார் என்று தெரிகின்றது.

அதற்கு முன்னர் கொழும்பு பொரளையில் ஏ.எவ்.றேமண்ட் மலர்ச்சாலையில் சம்பந்தனின் பூதவுடல் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும் எனத் தெரிகின்றது.

அதன் பின்னர் திருகோணமலையில் அவரின் இறுதி நிகழ்வுகள் இடம் பெறவிருக்கின்றன.

திருகோணமலையில் இறுதி நிகழ்வுக்கான ஏற்பாடுகளை சம்பந்தன் ஐயாவின் குடும்பத்தவர்களுடன் இணைந்து கிழக்கு மாகாண ஆளுநரின் விசேட பிரதிநிதிகள் கொண்ட அணி கவனிக்கும் என்றும் தெரிகின்றது.

⋆⋆⋆

வெளிநாட்டுக் கடன் மீளளிப்புத் தொடர்பான மறுசீரமைப்புக் குறித்து அந்த நாடுகளுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்று ஆரவாரமாக அறிவித்தது அரசு. அதனைப் பெரும் சாதனையாகவும் அது பிரகடனப்படுத்தியது.

அந்த ஒப்பந்தம் குறித்து நாளையும் மறு தினமும் நாடாளுமன்றத்தில் விசேட விவாதத்துக்கும் பிரதமரின் ஏற்பாட்டில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆனால், அந்த ஒப்பந்தத்தின் பிரதியை அரசு இன்னும் வெளியிடவில்லை. நாடாளுமன்றுக்கும் சமர்ப்பிக்க வில்லை. எதிர்க்கட்சியினருக்கும் அது கையளிக்கப்படவில்லை.

நாளைய விவாதத்துக்கு இன்றுதான் அதன் பிரதியை கையளிப்பார்களோ என்னவோ...?

அப்படி இறுதிவரை காட்டாமல் மறைத்து வைத்து, அதன் மீதான விவாதத்தை அவசர அவசரமாக நடத்தி, அதை அங்கீகரிக்க வைத்து, விடயத்தை விரைந்து முடிப்பதில் அரசு கரிசனையாக இருப்பதைப் பார்த்தால், இதற்கு பின்னால் ஏதும் சூத்திரம் பொதிந்து இருக்குமோ என்று பலதரப்புகளிலும் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஒப்பந்தத்தை நாடாளுமன்றத்தில் அங்கீகரித்து முடிந்த கையோடு, நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கும் சாத்தியமுண்டு என்று சில தரப்புகள் கருதுகின்றன.

பொறுத்திருந்து பார்ப்போம்...!

## சம்பந்தன்...

அவர் உடல் நலக்குறைவால் கொழும்பு தனியார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்தார்.

இலங்கையில் மிகவும் அரசியல் அனுபவம் வாய்ந்த மூத்த தமிழ்த் தலைவரான இரா. சம்பந்தன், 91 வயதில் உயிர் நீத்தார்.

1977 முதல் 1983 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த அவர், பின்னர் 2001 முதல் நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளார்.

2015 செப்டெம்பர் 3 முதல் 2018 டிசம்பர் 18 வரை இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் அவர் பதவி வகித்தார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காகக் கொழும்பில் மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு அதன்பின்னர் பூதவுடல் நாடாளுமன்றத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளுக்காக அவரின் சொந்த ஊரான திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### வாழ்க்கைச் சுருக்கம்

திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்ட சம்பந்தனின் தந்தை ஏ. இராஜவரோதயம் கல்லோயா திட்டத்தில் பணியாற்றியவர். சம்பந்தன் யாழ்ப்பாணம் சம்பத்தரிசியார் கல்லூரி, மொறட்டுவை புனித செபஸ்தியான் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்றார். பின்னர் இலங்கை சட்டக் கல்லூரியில் சட்டம் பயின்று சட்டத்தரணி ஆனார். லீலாதேவி என்பாரைத் திருமணம் புரிந்தார். இவர்களுக்கு சஞ்சீவன், செந்தூரன், கிரிசாந்தினி என மூன்று பிள்ளைகள் உள்ளனர்.

### அரசியல் பிரவேசம்

சம்பந்தன் 1977 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திருகோணமலைத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று நாடாளுமன்ற உறுப்பினரானார்.

1983ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்றத்தைப் புறக்கணித்தனர். இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின்படி தனி நாடு கோருவதற்கு ஆதரவளிக்க முடியாது என நாடாளுமன்றத்தில் சத்தியப் பிரமாணம் எடுக்க மறுத்தமைக்காகவும், 1983 கறுப்பு ஜுலை நிகழ்வுகளில் மூவாயிரத்துக்கும் அதிகமான தமிழர்கள் சிங்களக் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்டமைக்கும், அவர்களது உடைமைகள் சேதமாக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தும் அவர்கள் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்தனர். மூன்று மாதங்கள் தொடர்ந்து நாடாளுமன்ற அமர்வுகளில் பங்குபற்றாமல் போனதால் சம்பந்தன் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை 1983 செப்டெம்பர் 7 இல் இழந்தார்.

1989 நாடாளுமன்றத் தேர்தலில் சம்பந்தன் ஈ.என்.டி.எல்.எப்.ஃஈ.பி.ஆர்.எல்.எப்.ஃரெலோலோஃத.வி.கூ. கூட்டமைப்பின் வேட்பாளராக திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டார். கூட்டணியின் வேட்பாளர் எவரும் இம்மாவட்டத்தில் வெற்றி பெறவில்லை.

2001 ஆம் ஆண்டில் த.வி.கூ., அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.), ரெலோ ஆகிய கட்சிகள் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (த.தே.கூ.) என்ற புதிய கூட்டணிக் கட்சி ஒன்றை ஆரம்பித்தனர். இக்கூட்டணிக்கு சம்பந்தன் தலைமைப் பொறுப்பை ஏற்றார். அக்கட்சி தேர்தல் சட்டத்தில் அங்கீகரிக்கப்படாத படியால் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயரில் 2001 ஆம் ஆண்டுத் தேர்தலில் போட்டியிட்டது. சம்பந்தன் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இதன் காரணமாக 18 ஆண்டுகளின் பின்னர் சம்பந்தன் நாடாளுமன்றத்துக்கு மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமைக்கப்பட்ட சிறிது காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளை இலங்கைத் தமிழரின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு அவர்களுக்குச் சார்பாக தனது நிலைப்பாட்டை முன்னெடுத்தது. இந்நிலைப்பாட்டுக்கு த.வி.கூ. தலைவர் வீ.ஆனந்தசங்கரி எதிர்ப்புத் தெரிவித்து கூட்டமைப்பில் இருந்து விலகினார். அத்துடன், 2004 ஆம் ஆண்டு தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பெயருடன் போட்டியிடுவதற்கு ஆனந்தசங்கரி அனுமதிக்கவில்லை. இதனால் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்டனர். சம்பந்தன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

2004, 2010, 2015, 2020 நாடாளுமன்றத் தேர்தல்களில் சம்பந்தன் திருகோணமலைத் தேர்தல் மாவட்டத்தில் இருந்து மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### எதிர்க்கட்சித் தலைவர்

2015 தேர்தலில் முக்கிய கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சி (ஐ.தே.க.), ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (ஐ.ம.சு.கூ.) ஆகியன முறையே 106, 95 இடங்களைக் கைப்பற்றியிருந்தன. ஐ.தே.க. ஆட்சியமைப்பதற்குத் தேவையான அறுதிப் பெரும்பான்மை கிடைக்காததால், இரண்டு முக்கிய கட்சிகளும் இணைந்து தேசிய அரசு ஒன்றை அமைத்தன. இதனால் 16 இடங்களைக் கைப்பற்றி மூன்றாவது இடத்தில் இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் 2015 செப்டெம்பர் 3 இல் எதிர்க்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 2018 டிசம்பர் 18 வரை அவர் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவி வகித்தார்.

## எரிபொருள்...

டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 11 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 344 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 41 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 379 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 22 ரூபாவால் குறைக்கப்பட்டுள்ளது. சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 355 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# தேசிய பாதுகாப்பு என்பது எல்லைகள் பிரியாமல் பாதுகாப்பது மாத்திரம் அல்ல

## அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு



"தேசிய பாதுகாப்பு என்பது எல்லைகள் பிரியாமல் பாதுகாப்பது மாத்திரம் அல்ல. ஒரு நாடு என்ற வகையில், இலங்கையின் பொருளாதாரத்தை மற்ற நாடுகளைச் சார்ந்திருக்காத நிலைக்குக் கட்டியெழுப்புவது தேசிய பாதுகாப்பின் முதன்மையான பணியாகும்.

– இவ்வாறு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

மாத்தறை கோட்டை விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுடன் இணைந்து பொதுக் கூட்டத்தில் நான் உரையாற்றுவது இதுவே முதல் தடவையாகும். 2019 இல், சடத்தரணியாக பணியாற்றியவாறு நாட்டை முன்னேற்றவும் கோட்டாபய ராஜபக்ஷவின் வெற்றிக்காகவும் செயற்பட்டேன். ஆனால் கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக, எரிபொருள் மற்றும் எரிவாயு வரிசைகளின் யுகம் தொடங்கியது. அப்போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவரை அழைத்து, நாட்டை பொறுப்பேற்குமாறு கோரிக்கை விடுத்தார். அப்போது, திறைசேரி பதிவேடுகளைப் பார்த்துவிட்டு, எதிர்க்கட்சித் தலைவரும், அக்கட்சியில் இருக்கும் பொருளாதார நிபுணர்களும், அடுத்த 06 மாதங்களில் பொருளாதாரம் வெடித்துச் சிதறும் என்று தெரிவித்தனர். நாட்டைப் பொறுப்பேற்கப் பின்வாங்கினர்.


ஆனால், பொருளாதாரப் பிரச்சினையைக் கண்டு, ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்க முன்வந்தார். தேசிய பாதுகாப்பு என்பது எல்லைகள் பிரியாமல் பாதுகாப்பது மாத்திரம் அல்ல. ஒரு நாடு என்ற வகையில், இலங்கையின் பொருளாதாரத்தை மற்ற நாடுகளைச் சார்ந்திருக்காத நிலைக்குக் கட்டியெழுப்புவது தேசிய பாதுகாப்பின் முதன்மையான பணியாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதனைச் சரியாகச் செய்ய முடிந்தது.

அவருடைய திறமைக்கு ஓர் உதாரணம் சொல்கிறேன். அண்மையில் நான் பங்களாதேஷ் பிரதமரை சந்தித்தேன். 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இலங்கை உடனே திருப்பி செலுத்தும் என்று தான் நினைக்கவில்லை என்றும் அவர் கூறினார். தற்போது, நாடு வங்குரோத்து நிலையில் இருந்து காப்பாற்றப்பட்டு, ஈரானின் கடன் தவணைகள் கூட திருப்பிச் செலுத்த ஆரம்பித்துள்ளோம். இவை அனைத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார நோக்கின் காரணமாகவே மேற்கொள்ளப்பட்டன. மீண்டும் வீழ்ச்சியடையாத பொருளாதாரத்தை உருவாக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே முடியும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்கிறேன்." – என்றார்.



# ஜனாதிபதி இரு வருடங்களுக்குள் நாட்டுக்காக பாரிய பங்காற்றினார்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறுகின்றார்



"அந்த நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் சவாலை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அப்போது ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்குள் நாட்டுக்காகப் பாரிய பங்காற்றினார்."

– இவ்வாறு நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

மாத்தறை கோட்டை விளையாட்டரங்கில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தமது பதவிகளை இராஜினாமா செய்தனர். இதனையடுத்து, நாங்களும் அமைச்சரவையில் இருந்து விலகினோம். பொருளாதார நெருக்கடிக்கு எதிர்கொள்ளும் எந்தவொரு தலைவருக்கும் பொதுஜன பெரமுன ஆதரவளிக்கும் என்று தெரிவித்திருந்தோம். இன்று நாட்டைப் பொறுப்பேற்கத் துடிக்கும் பல தலைவர்கள் அன்று தப்பியோடினர்.

ஆனால் அந்த நெருக்கடியிலிருந்து நாட்டைக் காப்பாற்றும் சவாலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அப்போது ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு வருடங்களுக்குள் நாட்டுக்காக பாரிய பங்காற்றினார். அதனை நீங்கள் அனைவரும் அனுபவித்திருப்பீர்கள்.

இந்த நாட்டை வங்குறோத்து நிலையில் இருந்து மீட்டு, சரியான பொருளாதார திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடைமுறைப்படுத்தினார். பொருளாதாரப் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை. இந்த நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டு மாயின், அனுபவமுடைய, சவால்களை ஏற்கக்கூடிய தலைவர் ஒருவர் தேவை. அந்தத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. ஜனாதிபதி தேர்தலுக்கு வரப் போவதாக அவர் இன்னும் அறிவிக்க வில்லை. ஆனால், இந்த தொடர் பொதுக்கூட்டம் மூலம் மக்கள் அவருக்கு கோரிக்கை வைப்பார்கள் என்று நம்புகிறேன்" – என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இமயம் சரிந்தது

தந்தை செல்வநாயகத்தின் வழியில் தமிழ் தேசியத்துக்காக வாழ்ந்த - போராடிய - ஓர் இமயம் நேற்றிரவு சரிந்தது.

அவலப்பட்டு நிற்கும் ஈழத் தமிழர்களின் வாழ்வில் இந்த மறைவு ஒரு பேரிடி.

தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு பின்னர், வடக்கு - கிழக்குத் தமிழர்களை ஒரு தசாப்தத்திற்கும் அதிக காலம் தமது ஆளுமையின் கீழ் கட்டி வைத்திருந்த ஒரு தலைவர் இரா.சம்பந்தன்.

மிக இக்கட்டான ஒரு காலகட்டத்தில் வயது மூப்பு அவரைப் பறித்துச் சென்றுள்ளது. இந்த 91 வயதிலும் - தள்ளாத வேளையிலும் - ஈழத் தமிழ் தேசியத்துக்கு நின்று, நிலைத்து, நீடிக்கக்கூடிய கௌரவமான - நீதியான - தீர்வு வேண்டும் என்று கடுமையாக உழைத்தவர் அவர்.

தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதத்தின் காலாதி கால ஏமாற்றுதல்களை எல்லாம் சகித்து எதிர்கொண்டபடி, அவற்றுக்கு மத்தியிலும் நியாயமான தீர்வு ஒன்றைத் தமிழ் மக்களுக்குப் பெற்றுக் கொடுத்து விட வேண்டும் என்று கடைசிக் கணம் வரை - தமது கடைசி மூச்சு வரை - உழைத்தவர் சம்பந்தன்.

1977 பொதுத் தேர்தலில் திருகோணமலை நாடாளுமன்றத் தொகுதியில் வென்ற நாள் முதல் நேற்று வரை தமிழர்களின் மிதவாத அரசியலில் அவரை ஒதுக்கி எதுவுமே நடக்கவில்லை எனலாம்.

1980களில் இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினையில் பாரதம் நேரடியாகத் தலையிட்ட காலம் தொடக்கம் இந்தியாவோடும் சரி, சர்வதேசத்துடனும் சரி, ஈழத் தமிழர் விடயங்களை கையாள்வதில் அவரின் பங்கு முக்கியமானதாக இருந்தது.

தந்தை செல்வாவின் வழியைப் பற்றி நின்ற சம்பந்தன், அதன் காரணமாக ஆயுதப் போராட்ட வன்முறை மார்க்கத்தை முழுமையாக அங்கீகரிக்காவிட்டாலும், அதன் வழியில் தாம் பயணிக்காவிட்டாலும், அளவிட முடியாத பெரும் ஈகத்தோடும் தற்கொடைத் தியாகத்தோடும் தமிழ் இளைஞர்களும் போராளிகளும் முன்னெடுத்த வீரம் செறிந்த ஈழ விடுதலைப் போராட்டத்தை பெரிதும் மதித்தார். அதைப் போற்றினார் என்றும் கூடக் கூறலாம்.

தமது அரசியல் உலகில், தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்திற்குக் குந்தகம் ஏற்படுத்தாத வகையில் அவர் செயல்பட்டார். அந்தப் போராட்ட வலிமை தமிழர்களுக்கு நீதியான தீர்வு ஒன்றைப் பெற்றுத் தரும் என்று நம்பிய அவர், அதன் காரணமாக அதனுடன் ஒத்திசைந்து செயல்படும் மார்க்கத்திற்குத் தன்னை மாற்றிக் கொண்டார்.

விடுதலைப் புலிகளின் ஏக தலைமைத்துவத்தை ஏற்று, அதனை நாடாளுமன்றத்திலும் வெளியிலும் வெளிப்படுத்தியும் வந்தார்.

ஆயுதப் போராட்டம் தோற்கடிக்கப்பட்ட பின்னர், யதார்த்தப் புறநிலைகளை உணர்ந்து, மாற்று வழியில் - அஹிம்சை மார்க்கத்தில் - தமிழருக்கு நீதி தேடும் பயணத்தைத் தாமே தலைமையேற்று அவர் வழி நடத்தினார்.

மிலேனியத்தின் இரண்டாவது தசாப்தம் முழுவதும் அவரது ஆளுமை மிக்க தலைமையின் பங்களிப்பு ஓங்கி ஒலிப்பதை நாம் காணலாம். அச்சமயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்புக்குத் தலைவராக விளங்கிய அவர், கட்டுறுதியான ஒரு தலைமைத்துவத்தை வழங்கினார்.

தாம் எடுத்த முடிவில் விட்டுக் கொடாத தீர்க்கமான தலைவராக அவர் இருந்தார்.

அதேசமயம், ஐக்கியப்பட்ட இலங்கைக்குள், வடக்கும் கிழக்கும் இணைந்த தாயகத்தில், உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டித் தீர்வுக்காகக் கடைசி மூச்சு வரை அவர் அரசியல் சமராடினார்.

இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்கிய அவர், தலைவர் செல்வநாயகம், தளபதி அமிர்தலிங்கம் ஆகியோருக்கு அடுத்து, தென்னிலங்கை அரசியல் தலைவர்களால் பெரிதும் மதிக்கப்பட்ட தமிழத் தலைவர் என்றால் அது மிகையாகாது.

உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், நீதி, நியாயமான சமஷ்டித் தீர்வுக்குதமிழ்த் தேசிய இனம் போராடுகின்றது. அது தொடர்ந்து மறுக்கப்படுமானால், தங்களின் வெளிப்புற சுயநிர்ணய உரிமையை முன்னிறுத்த தமிழர்கள் தள்ளப்படுவார்கள் என்ற செய்தியைத் தமது கடைசி செவ்வியிலும் சம்பந்தன் வலியுறுத்திச் சென்றார். அதுவே தாம் தலைமை வகித்த தமிழினத்திற்கு அவர் விட்டுச் சென்ற செய்தியாகவும் அமைகிறது.

அவர் என்றும் போற்றும் திருகோணமலை ஸ்ரீ ஆதிபத்திர காளி அம்பாள் திருவடியில் அவர் நீங்கா நிலைகொள்வார்.



# ஜனாதிபதித் தேர்தலும் ஏனைய தேர்தல்களும் இந்த வருடமும் அடுத்த வருடமும் நடத்தப்படும்

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

“ஜனாதிபதி தேர்தல், பொதுத் தேர்தல் மற்றும் மாகாணசபை தேர்தல்கள் இந்த ஆண்டு மற்றும் அடுத்த ஆண்டில் நடத்தப்படும். தனிநபர் மற்றும் கட்சி சார்பின்றி நாட்டை முதன்மைப்படுத்தி அனைவரும் பொதுவான இணக்கப்பாட்டுடன் முன்னோக்கிச் செல்ல வேண்டும்”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மீண்டும் வலியுறுத்தினார்.

தற்போதைய அரசாங்கத்தின் வேலைத் திட்டம் மற்றும் முன்நோக்கி செல்லும் வழிகள் குறித்து மக்களைத் தெளிவுபடுத்தும் வகையில் நேற்று மாத்தறை கோட்டை விளையாட்டரங்கில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

‘ஒன்றாக வெல்வோம் – நாம் மாத்தறை’ என்ற தொனிப்பொருளில் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகரவினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த பொதுக் கூட்டத்தில் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

இந்த பொதுக் கூட்டத்தில் ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்துவதாக ஐ.எம்.எவ். உள்ளிட்ட ஏனைய தரப்பினருக்கு வாக்குறுதியளித்துள்ளோம். அதாவது எமக்குப் பணத்தை அச்சிட முடியாது, வங்கிகளிடமிருந்து கடன் பெற முடியாது. எனவே, எமக்கு வேறு வருமானம் தேவைப்பட்டது. வற் வரியை அதிகரித்தோம். இது மிகக் கடினமான தீர்மானமாக இருந்தாலும் நாம் அந்தத் தீர்மானத்தை எடுத்தோம். இன்று நாட்டில் ஸ்திரத்தன்மை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தையும் நாம் முன்னேற்ற வேண்டியுள்ளது. ஆனால் வற் வரியை இனியும் அதிகரிக்கப் போவதில்லை. ஆனால் செல்வந்தர்களிடம் விசேட வரியொன்றை அறவிட நேரிடும். இது சாதாரண மக்களைப் பாதிக்காது. எனவே, கடினமான தீர்மானங்களை எடுத்தோம். அதன்பின்னர் நாம் அஸ்வெசும திட்டத்தை அறிமுகப்படுத்தி சமூர்த்தியைப் போன்று மும்மடங்கு நிவாரணத்தை வழங்கினோம். 16 லட்ச பேருக்குப் பதிலாக 24 லட்சம் பேருக்கு நிவாரணம் வழங்கினோம்.

வங்குரோத்து இல்லாமல் நல்ல நிலையில் இருந்தபோது செய்ய முடியாத பல விடங்களை நாடு வங்குரோத்து அடைந்துள்ள இந்த நேரத்தில் செய்கின்றோம். சித்திரைப் புத்தாண்டு காலத்தில் குறைந்தவருமானம் பெறுவோருக்கு 10 கிலோ அரிசியை வழங்கினோம். அரச ஊழியர்களுக்கு 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை வழங்கினோம். அரசாங்க காணிகள் உள்ள அனைவருக்கும் நாம் காணி உறுதிகளை வழங்குகிறோம். அடுத்த வாரம் கொழும்பில் குறைந்த வருமானம் பெறும் 2 லட்சம் பேருக்கு குடியிருக்கும் வீடுகளின் உரிமத்தை வழங்கவுள்ளோம். 24 இலட்சம் குடும்பங்கள் தற்போது அஸ்வெசும நிவாரணம் பெறுகின்றனர். 20 லட்சம் பேருக்கு காணி உறுதிகள் கிடைக்கவுள்ளன. குறைந்தவருமானம் பெறும் இரண்டரை ஈலட்சம் பேருக்கு அடிக்குமாடி குடியிருப்பிற்கான உரிமம் கிடைக்கவுள்ளது.

நான் அடங்கலாக இந்த அமைச்சரவை எந்தக் கட்சிக்குச் சொந்தமானது எனக் கேட்கின்றனர். நாட்டிற்காக ஒன்று

தொடர்ச்சி▼









# ஜனாதிபதித் தேர்தலும் ஏனைய தேர்தல்களும் இந்த வருடமும் அடுத்த வருடமும் நடத்தப்படும்

தொடர்ச்சி▲

பட்டவர்களே இதில் இருக்கின்றனர். இதில் மொட்டுக் கட்சியினர் இருக்கின்றனர், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இருக்கின்றனர், டக்ளஸ் தேவானந்தா அமைச்சரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர், ஐக்கிய தேசியக் கட்சியினர் இருக்கின்றனர். நாம் நாட்டிற்காக ஒன்றிணைந்துள்ளோம். எமக்கென்று ஒரு கட்சி இல்லை. வெவ்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றனர். ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்களும் இருக்கின்றனர். புதிய அரசியல் முறைமையொன்றை நாம் ஆரம்பித்துள்ளோம். நாட்டிற்கு முதலிடம். அதன்பின்னரே கட்சி. மொட்டுக் கட்சியினர் உள்ளிட்ட பல தரப்பினரும் எதிர் கட்சியிலும் இருக்கின்றனர். ஆனால் நாட்டிற்காக சிந்தித்து பணியாற்றும் பலரே தற்போது அரசாங்கத்தில் இருக்கின்றனர். நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். இந்தப் பயணத்தில் நாம் தொடர்ந்து பயணிக்க வேண்டும். எம்முடன் இணைந்துகொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்த நாடாளுமன்றத்தில் ஓர் அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள முடியும். ஆனால் நாம் இந்தப் புதிய பாதையில் பயணிக்க வேண்டும். எதிர்க்காலத்தில் தலைமைத்துவத்தை எவ்வாறு பெறுவது? எவ்வாறு இந்தப் பணிகளை முன்னெடுப்பது என்று என்னிடம் கற்றுக்கொள்ளவும்



முடியும். அனைவரும் ஒன்றிணைந்து இந்த அரசியல் முறையை மாற்றுவோம். தினமும் கூச்சலிட்டுக் கொண்டிருப்பதில் பலனில்லை. நான் அவ்வாறு செய்யவில்லை. நாம் புதிய பாதையில் பயணிக்கிறோம். இதற்காக அர்ப்பணிக்க வேண்டும். நான் அதற்காக அர்ப்பணித்துள்ளேன்.

அடுத்த தேர்தலில் என்ன செய்யப் போகிறோம் என்பதை அனைவரும் பேசித் தீர்மானிக்கலாம். ஜனாதிபதித் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அதன் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலை எவ்வாறு சந்திப்பது என்பதைத் தீர்மானிக்கலாம். அந்தத் தீர்மானங்களுக்கு இணங்க செயற்பட நானும் தயார். எங்களுக்கு இன்று தனிநபர், கட்சி சார்ப்பு அரசியல் இல்லை. நாம் நாடு குறித்து சிந்திக்க வேண்டும். நாட்டை முன்னிலைப்படுத்து முன்நோக்கிப் பயணிப்போம் என்று கூறவிரும்புகிறேன். இந்த வருடமும், அடுத்த வருடமும் தேர்தல்கள் வருகின்றன. ஜனாதிபதித் தேர்தல் வருகிறது. நாடாளுமன்றத் தேர்தல் வருகிறது. அதன்பின்னர் மாகாண சபைத் தேர்தல் நடைபெற இருகிறது. உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தப் பணம் இல்லை, அதனால் அதனை இறுதியாக நடத்துமாறு கோரினார்கள். அதுகுறித்து கூச்சலிடத் தேவையில்லை. ஊர்வலம் வர முன்னர் மேளதாளங்கள் அவசியமில்லை. இதுகுறித்தும் நாம் தீர்மானிக்க வேண்டும். எவ்வாறாயினும், நாம் எதிர்காலம் குறித்து சிந்தித்துப் பணியாற்றுவோம். அண்மைக்காலமாக நீங்கள் பட்ட துன்பம் குறித்து கவலையடைகிறேன். இந்த அரசாங்கம் அது தொடர்பில் கவலைகொள்கிறது. அடுத்ததாக நாம் எடுத்த தீர்மானங்களை நாம் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதனைப் பாதுகாத்துக் கொள்ள ஒன்றிணையுமாறு நாம் அனைவரையும் அழைக்கிறேன். எதிர்காலத்தில் புதிய பாதையில் பயணிக்க வருமாறு அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறேன்.” – என்றார்.










# ‘உறுமய’ வேலைத்திட்டத்தில் மொனராகலை மாவட்ட மக்களுக்காக 41,960 காணி உறுதிகள் வழங்கப்பட்டன

“முழு உரிமையுள்ள காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் ‘உறுமய’ வேலைத் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் அதிகளவு உறுதிகளை வழங்கும் பிரதேச செயலகத்தில் குளங்களைப் புனரமைப்பதற்கு 25 மில்லியன் ரூபா வழங்கப்படும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

20 லட்சம் காணி உறுதிகளை வழங்கும் ‘உறுமய’ தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மொனராகலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவுகளில் தகுதியான 41,960 பயனாளிகளில், அடையாள ரீதியில் 600 பேருக்கு உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று வெல்லவாயவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

மொனராகலை மாவட்ட மக்களுக்கு உறுமய காணி உறுதிப்பத்திரங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட ஜனாதிபதி, பின்னர் மக்கள் மத்தியில் சென்று அவர்களின் தகவல்களை கேட்டறிந்து சுமூகமான உரையாடலில் ஈடுபட்டார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

கண்டி இராச்சியத்திற்கு தேவையான அரிசி இந்த வெல்லஸ்ஸ பிரதேசத்தில் இருந்தே வழங்கப்பட்டது. ஆனால் 1818 போருக்குப் பிறகு வெல்லஸ்ஸ முற்றாக அழிக்கப்பட்டது.

இங்கு வாழ்ந்த மக்கள் வேறு பகுதிகளுக்கு குடிபெயர்ந்தனர். அதன் பின்னர் இந்த மொனராகலை மாவட்டம் 1960 இல் உருவாகியது. 1977 ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் நான் இப்பகுதிக்கு வரும் போது இந்த மாகாணம் மிகவும் பின்தங்கிய மாகாணமாக இருந்தது.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர் மொனராகலை மாவட்டத்தின் அபிவிருத்தி வெவ்வேறு அரசாங்கங்களின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது. வெளி மாகாணங்களில் இருந்து வந்தவர்கள் இங்கு குடியேறினர். வீடுகள் நிர்மாணிக்கப்பட்டன.

இதனால், இப்பகுதி நகரமயமாக்கப்பட்டது. இப்பிரதேச மக்களின் முயற்சியினால் மொனராகலை விவசாய பிரதேசமாக அபிவிருத்தியடைந்தது.

இது உங்கள் முன்னோர்களின் வியர்வையால் கட்டியெழுப்பப்பட்ட பிரதேசமாகும். ஆனால் இந்தப் பகுதி மக்களுக்கு முழு உரிமையுள்ள காணி உரிமை இருக்கவில்லை. மொனராகலை மாவட்ட விவசாயிகள் இந்த நாட்டிற்காக ஆற்றிவரும் சேவைக்கு உரிய கவனம் செலுத்தப்படவில்லை. ஆனால் மொனராகலை விவசாயிகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இந்த உறுமய காணி உறுதிப்பத்திரங்களை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். அது தொடர்பில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்.

மொனராகலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கப்பட வேண்டும். இந்த காணி உரிமைகளை மக்களுக்கு வழங்க வேண்டாம் என்று சிலர் கூறினர். சிலர் நீதிமன்றத்துக்கும் சென்றனர். ஆனால் அவற்றுக்கு முகங்கொடுத்தே இன்று மக்களுக்கு காணி உரிமையை வழங்கியுள்ளோம்.

இந்தக் காணி உரிமையைப் பெற்றுக் கொள்வது மாத்திரம் போதாது. அரசாங்கத்தின் விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தில் அனைவரும் இணைய வேண்டும். இந்தப் பகுதிகளில் விவசாயத்தை மேம்படுத்துவதன் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை நோக்கி நாம் விரைவாகச் செல்ல வேண்டும். அதற்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படும். துறைமுகம் மற்றும் விமான நிலையம் இரண்டும் இந்தப் பகுதியில் அமைந்துள்ளன.

எனவே, உடவலவ, மொனராகலை,

தொடர்ச்சி▼













# ‘உறுமய’ வேலைத்திட்டத்தில் மொனராகலை மாவட்ட மக்களுக்காக 41,960 காணி உறுதிகள் வழங்கப்பட்டன

தொடர்ச்சி▲

அம்பாறை மற்றும் மகாவலி சி வலயத்தை உலர் பிரதேசத்தில் பாரிய விவசாய வலயமாக அபிவிருத்தி செய்ய எதிர்பார்க்கின்றோம். விவசாயிகளுக்கு காணி உரிமை வழங்கப்படுவது மாத்திரமின்றி, அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கான பிரவேசம், இந்த உறுமய வேலைத்திட்டம் மூலம் முன்னெடுக்கப்படுகிறது.

எதிர்வரும் 30, 40 வருடங்களில் உலகிற்குத் தேவையான உணவு கிடைப்பது பாரிய பிரச்சினையாக இருக் கும். அந்த உணவை வழங்க நாம் தயாராக இருக்க வேண்டும். அதற்கு இந்த மாகாணங்களில் முழுமையான விவசாய முறை உருவாக்கப்பட வேண்டும்.

மேலும், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் பாரிய முதலீட்டு வலயங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளோம். அதேபோன்று, சுற்றுலாத்துறை மற்றும் மீன்பிடித் தொழிலை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி காலி தொடக்கம் அம்பாறை வரையில் பாரிய செயற்படுகள் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன. அந்த நடவடிக்கைகள் அடுத்த 20-30 ஆண்டுகளில் செய்யப்பட வேண்டும்.

அந்த நேரத்தில் நாம் இல்லாவிட்டாலும், நமது வருங்கால சந்ததியினருக்காக அந்த விடயங்களைச் செயற்படுத்த வேண்டும். இந்த வேலைத் திட்டத்தின் மூலம் வெல்லவாய பாரிய அபிவிருத்திகளைப் பெறும். வெல்லாவையில் இருந்துதான் மலையகத்திற்கான பிரவேசப் பாதை உள்ளது. எல்ல மற்றும் பிபில ஊடாக பஸ்ஸறை வரை இந்த அபிவிருத்தி நகர்கிறது.

உறுமயகாணிஉறுதிப்பத்திரங்களை வழங்குவதில் ஏற்பட்டுள்ள காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் தேவையான பணியாளர்களை நியமிக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இந்தத் திட்டத்தை நாம் துரிதப்படுத்த வேண்டும். இந்த காணி உறுதிப்பத்திரங்களைப் பெறுவதற்குத் தகுதியானவர்களின் பட்டியல் ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உள்ளது. அவர்களை அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு வரவழைத்து பிரச்சினைகள் இருப்பின் அவற்றைத் தீர்த்து இந்த உறுதிப்பத்திரங்கள் வழங்குவதை விரைவில் நிறைவு செய்யுமாறு அனைத்துப் பிரதேச செயலகங்களையும்கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த நடவடிக்கைகளுக்கு பிரதேச அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பிரதேச செயலாளருடன் இணைந்து கொள்ள முடியும். இந்த நடவடிக்கைகள் இம்மாதத்திற்குள் முடிக்கப்பட வேண்டும். அதிகளவான உறுமய காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள குளங்களைப் புனரமைப்பதற்காக 25 மில்லியன் ரூபாவை வழங்குவேன் என்பதை உறுதியாக கூறுகிறேன். இந்த இரண்டு திட்டங்களிலும் இந்த நாட்டில் முழு உரிமையுள்ள காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்ளும் மக்களே வெற்றி பெறுகிறார்கள் என்பதைக் கூற வேண்டும். இந்தக் காணி உரிமையுடன் புது வாழ்க்கையை ஆரம்பிக்க உங்கள் அனைவரையும் அழைக்கிறோம்.” – என்றார்.









# நாதஸ்வர இசைப் பேரறிஞர் கலாநிதி பஞ்சாபிகேசன் ஓர் இரசிகனின் பார்வையில்...!

அப்போது எனக்கு 8 வயது இருக்கும். ஒரு திருமண வீட்டில் காலை வேளையில் ஒரு சிறுவனாக அங்கும் இங்கும் ஓடித் திரிந்து கொண்டிருந்த எனது கவனம் அங்கு வந்து சேர்ந்த நெடிதுயர்ந்த தோற்றம் உடைய ஒருவர் மீது ஈர்க்கப்படுகிறது. அவர் வேட்டி, நஷனல் அணிந்து காதில் கடுக்கனுடன் தலையில் குடுமி வைத்த ஒரு பீப்பிக்காரர். அவரோடு கூடவே இன்னுமொரு பீப்பிக்காரரும், இரண்டு மேளக்காரரும் தாளம் மற்றும் சுருதிப் பெட்டிக்காரரும் என எல்லாமாக 6 பேர் இருந்தார்கள்.


கிடுகால் வேயப்பட்டு, உட்புறம் வெள்ளை கட்டி, மணி மாலைகள் வரிசையாக தொங்கவிட்டு முத்து மணவறை வைக்கப்பட்டிருந்த திருமண கொட்டகைகக்குள் தமக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நிலத்தில் கம்பளம் விரித்து அந்த 6 பேரும் அமர்ந்து கொண்டார்கள். மேளக்காரர்கள் தங்களது மேளத்தின் தோலை தடியின் அடிப்பகுதியால் வட்ட வடிவில் ஊன்றி, வருடி தடியால் இரண்டு தட்டுக்கள் தட்டி, கை முஷ்டியால் இரண்டு அமுக்கு அமுக்கி, விட்டு அடிக்கத் தொடங்க, பீப்பிக்காரர்கள் தங்கது பீப்பியில் தொடங்க விடப்பட்டிருந்த சிறிய ஊதலை தமது வாயில் வைத்து அடுத்தடுத்து பீப்பி... என்று மூச்சால் முக்கி ஊதியும் சேர்ந்து தொங்கிய வெள்ளை நிற முள்ளு ஒன்றினால் அந்த சிறிய ஊதலின் உள்ளே செலுத்தி அடைப்பு எடுத்தும் தயார் செய்து, அதனைப் பீப்பியில் பொருத்திக் கொண்டார்கள். கொற... கொற... என்று ஓசை எழுப்பி ஒருமுறை சரிபார்த்து விட்டு அந்த குடுமிக்காரர் ஊதத் தொடங்க மற்றவரும் சேர்ந்து ஊத கல்யாண மேளக் கச்சேரி தொடங்கியது. இப்படித்தான் என் சிறிய மனது அப்போது அவர்களையும் அந்த நிகழ்வையும் விளங்கிக்கொண்டது.

ஆம்! அந்த நெடிதுயர்ந்த குடும்பி வைத்த பீப்பீக்காரர்தான் இன்று நூற்றாண்டு காணும் நாதஸ்வர இசைப்பேரறிஞர் கலாநிதி முருகப்பா பஞ்சாபிசேன் அவர்கள். அவர் அந்த திருமணத்தில் 'ஞான விநா யகனே சரணம்' என்ற நாட்டை இராகத்தில் அமைந்த பாடலை வாசித்துக்கொண்டிருந்தார். அப்போது அந்த பாடல் பற்றியோ, அது எந்த இராகம் என்பது பற்றியோ அறிந்திருக்கா விட்டாலும் அன்று தொடங்கிய பஞ்சாபிகேசன் ஐயா மீதான இரசனை எனக்கு இவற்றை எல்லாம் அறிந்து கொள்வதற்கான சந்தர்ப்பத்தை பின்னாளில் ஏற்படுத்தி தந்தது. திருமண ஆரம்பக் கச்சேரி தொடங்கி சிறிது நேரத்தில் மாப்பிள்ளை வந்து சேர்ந்ததும் அமர்ந்து வாசித்த கச்சேரியை நிறுத்தி மாப்பிள்ளையை அழைத்து வருவதற்காக தவில் நாதஸ்வரக் கலைஞர்கள் திருமண வீட்டின் வாசலுக்கு சற்று அப்பால் வரை சென்று பெண்ணின் தகப்பனார் மாப்பிள்ளைக்கு வரவேற்ற சமநேரத்தில் தவில், நாதஸ்வரக் கலை ஞர்களுக்கும் சால்வை அணிவித்து கௌரவித்தார். மங்கல இசையான தவில், நாதஸ்வரமும் கலைஞர்களும் இன்றியமையாத வகையில் எங்கள் வாழ்வியலோடு பண்பாட்டு பாரம்பரியத்தோடும் எவ்வாறு இரண்டறக் கலந்திருந்தார்கள் என்பதற்கு முன்சென்ன நிகழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.



சட்டத்தரணி கே.சயந்தன்

இவ்விதமாக எனது இளமைக் காலத்தின் ஆரம்பத்தில் ஒரு விநோத நிகழ்வை கவனிப்பது போல் தொடங்கிய நாதஸ்வர இசை மீதான ஈர்ப்பா னது வளர் பருவங்களின் ஊடே நாதஸ்வரக் இசைக் கலையை இரசிப்பவனாகவும் அந்த இசைக் கலானுபவத்தை நித்தமும் அள்ளிப் பருக விரும்பும் ஒரு நாதஸ்வர இசைப்பித்தனாகவும் என்னை மாற்றியது என்றால் அது பஞ்சாபிகேசன் ஐயா தனது நாதஸ்வரத்தை கையாளும் வித்தகம், அவரது தோற்றப்பொலிவு மற்றும் அந்த நாதஸ்வர வாத்தியத்தின் சீர்வாளியூடாகக் காற்றை ஊதி விரல்களால் அதை




நகர்த்தி எமக்கு பரிமாறும் இசை என்ற மூன்றுமான அந்த சேர்க்கை தான் காரணம் என்றால் அது சரியான தொரு விவரிப்பு என்பதில் யாரும் என்னோடு முரண்பட மாட்டார்கள் என நம்புகிறேன்.

எங்கது இளமைப் பருவத்தில் தென்மராட்சியில் இரண்டு கோயில்களில் நடைபெறும் சித்திரத் தேர்த்திருவிழாக்கள் பிரசித்தி பெற்றவை. ஒன்று மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில். மற்றையது வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோவில். இரண்டு கோவில் தேர்த் திருவிழாக்களிலும் இசை வடிவில் இறைவனைக் காட்டி பக்தர்களை வசப்படுத்தும் இறை தூதனாக ஆலய வீதிகளில் இறைவனோடு சேர்ந்து வலம் வந்துகொண்டிருந்த ஒரு இசைச் சீராளனாக பஞ்சாபிகேசன் ஐயா திகழ்ந் தார் என்பதை பக்தர்கள் யாவரும் அறிவார்.

அது மாத்திரம் அல்ல, நல்லூர் கோவிலின் 25 நாள்கள் மகோற்சவத்தின் போதும் அக்கோவிலின் திருவிழாக் கால ஆஸ்தான வித்துவான் அளவெட்டி என்.கே. பத்மநாதன் குழுவினர் முருகப்பெருமானுக்கு இசையால் இறைசேவகம் செய்வார்கள். ஆயினும் இறுதி இரண்டு நாள்களான சப்பறத் திருவிழாவும் தேர்த் திருவிழாவும் ஆஸ்தான தவில் நாதஸ்வர கலைஞர்களோடு முருகப்பா பஞ்சாபிகேசன் குழுவினர் சேர்ந்து கொள்வதால் அந்த இரண்டு நாள்களும் தனிப் பொழிவு பெறும். அத்தனை திரளான பக்கதர்களுக்கு மத்தியிலும் பஞ்சாபிகேசன் ஐயாவின் நாதஸ்வர வாசிப்பை கண்டு களிக்கும் பாக்கியம் அவரது உயரம் காரணமாக பக்தர்கள் எல்லோருக்கும் கிடைக்கும். அந்த நாள்களில் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த் திருவிழா இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன வானொலியில் மட்டுமே நேரடியாக அஞ்சல் செய்யப்படும். வசந்த மண்டபத்தில் இருந்து சுவாமி எழுந்தருளுகையில் வானலைகளின் ஊடாக ஏனையவர்களிடம் இருந்தும் தனித்துவமானதொரு இசைத் தொனியில் மல்லாரி இசை வெளிக்கிளம்பும். அது நிச்சயமாக பஞ்சாபிகேசன் ஐயாவினுடையது. பஞ்சாபிகேசன் ஐயா தன் உடம்பை பின்னோக்கி வளைத்து நாதஸ்வரத்தின் அனசுவைமேல் நோக்கி உயர்த்தி காற்றில் தனது இசையைப் பரவ விடுகையில் ஒலிவாங்கியால் உள்வாங்கப்பட்டதால் மேலெ

தொடர்ச்சி▼

# நாதஸ்வர இசைப் பேரறிஞர் கலாநிதி பஞ்சாபிகேசன் ஓர் இரசிகனின் பார்வையில்...!

தொடர்ச்சி▲

ழுந்ததே அந்த வெளிக்கிளம்புகை. அது அவரது தனிப்பாங்கு. மல்லாரி என்றால் அதை பஞ்சாபிகேசன் ஐயா இசைத்தால்தான் அது மல்லாரி. ஆலயத்தில் கூடியிருக்கும் பக்கதர்களை ஒரே லயத்திற்கு கொண்டு வந்து விடும்.

பஞ்சாபிகேசன் ஐயாவை நாடு முழுவதும் உள்ள நாதஸ்வர இசைப்பிரியர்கள் அறிந்து கொள்வதற்கு வேறும் பல சந்தர்ப்பங்கள் இருந்தாலும் அவரது இசையை வானலைகளின் ஊடு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் எடுத்துச் சென்று திக்கெட்டும் பரப்பிய இன்னுமொரு சந்தர்ப்பம் கொழும்பில் நடைபெறும் ஆடிவேல் விழாவாகும். ஆடிவேல் விழாவின் தேர்ப்பவனி நெடுகலும் பஞ்சாபிகேசன் ஐயாவின் நாதஸ்வர இசை முழங்கும். அப்படியாக 1983ஆம் ஆண்டு நடைபெற்ற ஆடிவேல் விழாவில் கச்சேரி நடத்தச்சென்ற பஞ்சாபிகேசன் ஐயாவும் குழுவினரும் அப்போது நடைபெற்ற ஜூலை இனகலவரத்தில் அகப்பட்டு கொழும்பு றோயல் கல்லூரி அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டு ஊர் திரும்பியது வரலாறு.

நாதஸ்வரங்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று பாரி. இன்னொன்று திமிரி. பாரி திமிரியை விட சற்று நீளமானது. பாரியை இரண்டு கட்டை என்றும் திமிரியை மூன்று கட்டை என்றும் நாதஸ்வரக் கலைஞர்கள் தமக்குள் குறிப்பிட்டுக்கொள்வார்கள். பாரிக் குழலை வாசிப்பதற்கு நாதஸ்வர இசைத் துறையில் அதிக தேர்ச்சி தேவை. பஞ்சாபிகேசன் ஐயா எப்போதும் பாரிக்குழலையே பயன் படுத்துவார்.

இந்தியாவில் கலையை ஆற்றுகை செய்வதற்கு பல சபாக்கள் உள்ளன. ஆனால் எங்கள் ஊரில் ஆலயத் திருவிழாக்களின் இறுதி நாளான பூங்காவனத் திருவிழாதான் தவில் நாதஸ்வரக் கலையை அரங்கேற்றும் சங்கீத சபாக்கள். அதிலும் பஞ்சாபிகேசன் குழுவினர் இல்லாத பூங்காவனத் திருவிழாக்களே இல்லை. பெருமளவுக்கு பஞ்சாபிகேசன் ஐயா நாதஸ்வர இசைத் துறையில் தவிர்க்க முடியாதவராக இருந்தார். கடந்த காலங்களில் ஆலயங்களில் பூங்காவனத் திருவிழாக்களிற்கு புகழ்பெற்ற பலர் நாதஸ்வர வித்துவான்கள் அழைக்கப்படும் போதிலும் அவர்கள் எல்லோரையும் ஒரே மேடையில் வைத்து ஒன்றாகக் கச்சேரி நடாத்துவது பல சமயங்களில் சாத்தியமில்லாமல் இருந்தமைக்கும், ரசிகர்கள் எதிர்பார்க்கும் ஒத்திசைவை வழங்க முடியாத பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டமைக்கும் பஞ்சாபிகேசன் ஐயா பாரிக்குழலையும் ஏனைய வித்துவான்களில் பலர் திமிரிக் குழலையும் பயன்படுத்தியமை காரணமாகவிருந்தது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் அவ்வப்போது நாதஸ்வர இசைக் கலைஞர்களுக்கான தரப்படுத்தல் விருதை வழங்குவது வழக்கமாக இருந்து வந்த காலத்தில் பஞ்சாபிகேசன் ஐயா A தர விருதுக்குரியவராக இருந்தார். அதற்கு முன்னரும் A தர விருது வழங்கப்பட்ட போதிலும் அவற்றைப் பெற்றவர்களில் பாரிக் குழலைப் பயன்படுத்தியவர்கள் இருந்திருக்கவில்லை. இது பஞ்சாபிகேசன் ஐயாவின் இசைத் தனித்துவங்களில் ஒன்றாக இன்றும் சிலாகிக்கப்படுவதாக உள்ளது.

திருவிழா என்று வந்துவிட்டால் ரசிகர்களின் விருப்பம் தவிர்க்க முடியாதது. தவில், நாதஸ்வர வித்துவான்கள் இராகங்களில், கீர்த்தனைகளில், உருப்படி களில் என்று என்னதான் அசத்தினாலும் சாதாரண ரசிகர் அவரது அன்றாட வாழ்வோடு ஒன்றிய திரை இசைப் பாடல்களை இசைக்கும்படி வேண்டி நாதஸ்வரக் கலைஞர்களை உற்சாகப் படுத்துவார்கள். ஒரு கலைஞனுக்கு அவன் ஆற்றுகை செய்வதற்கு மேடை அல்லது சபையும் அமைய வேண்டும். அதுதான் அந்தக் கலைஞனின் ஆற்றுகை செய்வதற்கான மனவிருப்பை கிளர்ந்தெழச் செய்யும். பஞ்சாபிகேசன் ஐயாவும் இதற்கு விதிவிலக்கானவர் அல்லர். பஞ்சாபிகேசன் ஐயா பூங்காவனத் திருவிழா ஒன்றில் ஜெகன்மோகினி இராகத்தில் கச்சேரியைத் தொடங்கிவிட்டார் என்றால் அவர் நிறைந்த ரசிகர்களைக் கண்டுகொண்ட பூரிப்பில் இருக்கின்றார் என்பதை அவரைத் தொடர்ந்து பின்பற்றும் தீவிர ரசிகன் ஒருவன் அவரது இசையை தூரத்தில் இருந்து செவிமடுக்கும் போதே அறிந்துகொள்வான். அது போலவே சில திரையிசைப் பாடல்களை பஞ்சாபிகேசன் ஐயா இசைக்கக் கேட்பது அந்தப் பாடலின் இன்னுமொரு பரிமாணத்தை அள்ளி வழங்குவதாக இருக்கும். "தேவன் கோயில் மணி யோசை நல்ல சேதிகள் சொல்லும் மணியோசை" என்ற சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் அமைந்த பாடல் பஞ்சாபிகேசன் ஐயாவின் நாதஸ்வர இசையாக வெளிவரும்போது அந்த தேவனே மேலிருந்து வருவதுபோல் ரசிகர்கள் மெய்சிலிர்ப்பார்கள். "கங்கைக் கரைத் தோட்டம் கன்னிப் பெண்கள் கூட்டம் கண்ணன் நடுவினிலே..." என்று பஞ்சாபிகேசன் ஐயா வாசிக்கும்போது ஏற்படும் கிளர்ச்சியை வெளிப்படுத்த வார்த்தைகள் கிடைக்காது. அதுமட்டுமல்ல "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா செல்வக் களஞ்சியமே..." மற்றும் "சிந்துநதியின்மிசை நிலவினிலே..." என்ற பாரதியார் பாடல்களைப் பஞ்சாபிகேசன் ஐயா வாசிக்கையில் மூச்சடக்கி காற்றை விடுவித்து இசையாக வழங்குவதில் ஒரு நாதஸ்வர இசைக் கலைஞனுக்கு இருக்க வேண்டிய லாவகத்தைப் புரிந்து கொள்ளலாம்.

இறைவனுக்குப் பக்தர்கள் ஆள்படுதல் போல இசைக்கும் ஆள்படுவோர் உண்டு. பஞ்சாபிகேசன் ஐயா நாகவராளி வாசித்தால் அதுதான் நாகவராளியின் வகை மாதிரியாக இருக்கும். அவர் நாகவராளி வாசிக்கும்போது வெளிப்படுத்தும் உடல்மொழி அவரது ஆற்றுகைத்திறன் என்பவற்றால் அதனைக் கேட்பவர்கள் பலர் அந்த இசைக்கு ஆட்பட்டு ஆடியதையும் மூர்ச்சையாகியதையும் நான் நேரில் பார்த்திருக்கிறேன். அவரது இசை வாரிசான அவரது மூத்த மகன் திரு. பஞ்சாபிகேசன் நாகேந்திரனும் சேர்ந்துவிட்டால் இசைப்பூரிப்பை சொல்லவே தேவையில்லை.

வெற்றியாளர்கள் எல்லோரது வெற்றிக்குப் பின்னாலும் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக யாரோ ஒருவர் இருப்பதை நாம் அன்றாடம் பார்த்திருக்கின்றோம். ஒரு நாதஸ்வரக் கலைஞனுக்கு சிறந்தது ஒரு தவில் கலைஞரும் வந்து அமைய வேண்டும். அதிலும் ஒரே வயிற்றில் பிறந்த இருவர் அவ்விதம் அமைந்துவிட்டால் அதுதான் இறைவனின் கொடை. பஞ்சாபிகேசன் ஐயாவிற்கு அவ்விதம் வந்தமைந்த தவில் வித்துவான் அவரது சொந்த சகோதரர் அமரர் முருகப்பா நடராஜசுந்தரம் அவர்கள். ஈழத்தின் புகழ் பூத்த தவில் மேதை அமரர் வி. தட்சணாமூர்த்தி தன்னோடு நாதஸ்வரம் வாசிப்பதற்கு எப்போதும் நாதஸ்வரமேதை பஞ்சாபிசேன் அவர்களையே இணை சேர்த்துக் கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தாலும் பஞ்சாபிகேசன் அவர்களின் இணையானவர்களில் வித்துவான் என்று எப்போதும் அடையாளம் காணப்பட்டவர் அவரது சகோதரர் தவில் வித்துவான் அமரர் நடராஜசுந்தரம் அவர்களே என்பது அவரது இசைப் பயணத்தில் ஒரு தனி அடையாளமாகும்.

1996ஆம் ஆண்டின் நவராத்திரிக் காலமது. ஒரு மாலைப் பொழுதில் ஏதும் அறியாதவனாக வழக்கம் போலவே பஞ்சாபிசேன் ஐயாவின் இசை அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளும் ஆவலில் அவரது

தொடர்ச்சி▼

# நாதஸ்வர இசைப் பேரறிஞர் கலாநிதி பஞ்சாபிகேசன் ஓர் இரசிகனின் பார்வையில்...!

**தொடர்ச்சி▲**

வீட்டிற்குச் சென்ற போது அவரது குடும்பத்தார் ஐயாவின் உடல் நலம் திடீரெனக் குன்றியிருப்பது குறித்து கவலையடைந்தவர்களாக இருந்தார்கள். மறுநாள் விஜயதசமி. ஐயா வழமையாக கலைத்தெய்வத்தை ஆசாரமாக இசையால் அர்ச்சித்து வழிபடும் தினம். அவர் தனது நாதஸ்வரத்தைக் கையில் எடுத்து ஓரிரு சுரங்களை வாசித்திருப்பார் போலும், அவரது போற்றுதலுக்குரிய அந்த நாதஸ்வரம் அவரது கையில் இருந்தும் நழுவி விழுகிறது. ஐயா அப்படியே உடைந்து அழுகின்றார். இதனை அவரது பேரப்பிள்ளைகளில் ஒருவர் பகிர்ந்தபோது தலையில் இடி விழுந்தது போல் ஓர் உணர்வு. ஆம்! பக்கவாத நோயினால் ஐயாவின் ஒரு கை பாதிக்கப்பட்டிருந்தது. அவரது விரல்கள் இயங்க மறுத்தன. உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். அந்த இசை மேதையை, அவரது இசையை மீட்டெடுக்க வேண்டும். செந்தமிழ் சொல்லருவி ச. லலீசன் அவர்களது மாமனார் திரு. ந. ஸ்ரீதரன் அவர்கள் ஒரு தேர்ந்த இயன் மருத்துவராக இருந்தார். அவர் ஏற்கனவே அறிமுகமானவராக இருந்ததை எனக்கு அளிக்கப் பட்டிருந்த வரங்களில் ஒன்றாக நான் உணர்ந்தேன். சிகிச்சை ஆரம்பமாகியது. ஆறு மாதங்களில் ஐயா பூரணசுகம் பெற்று மீண்டும் தனது இசையை வழங்க ஆரம்பித்தார். ஒரு இரசிகனாக என்னால் அவருக்கு வழங்க முடிந்த மிகப் பெரிய தட்சணை அதுவாக அமைந்தது என்பதில் நான் மனநிறைவடைந்தேன்.

பஞ்சாபிகேசன் ஐயாவின் இரண்டு புதல்வர்களும் நாதஸ்வர இசை ஆற்றுகை செய்ய ஆரம்பித்த காலத்திலிருந்தே தமது தந்தையுடன் இணை வாசித்திருந்தாலும் உடல்நலக் குறைவிலிருந்து ஐயா மீண்ட பின்னரான காலப்பகுதியில் அனேகமான சந்தர்ப்பங்களில் ஐயாவுக்கு இணை நாதஸ்வரம் வாசித்தவர் ஐயாவின் மற்றொரு புதல்வரான திரு. பஞ்சாபிகேசன் விக்கினேசுவரன் (அனார்) ஆவார். பஞ்சாபிகேசன் ஐயாவைப் போலவே அனார் அண்ணரும் மிகவும் பணிவானவர். அனார் அண்ணரின் இரண்டு புதல்வர்களான சித்தார்த்தனும் பிரதித்தனும் பஞ்சாபிகேசன் பேரர்கள் என்ற பெயரில் பஞ்சாபிகேசன் ஐயாவின் பெயரை நிலைநாட்டி சந்ததியின் ஊடாக இசை கடத்தப்படுவதற்கு சான்று பகர்ந்து நிற்கின்றனர்.

இவ்விதம் 1924ஆம் ஆண்டு பிறந்து 2015ஆம் ஆண்டு இறக்கும் வரை பஞ்சாபிகேசன் ஐயா ஏறக்குறைய 75 வருடங்களுக்கும் மேலாக இசைப் பணியாற்றி இருக்கின்றார். நாதஸ்வர இசைத் துறையில் பவள விழாக் கண்ட இசைப் பேரறிஞர் கலாநிதி முருகப்பா பஞ்சாபிகேசனுக்கு தென்மராட்சி மக்கள் இன்று நூற்றாண்டு விழா எடுக்கின்றனர்.

நினைவுகளில் வாழட்டும் பஞ்சாபிகேசன் ஐயாவின் நாதஸ்வர இசை!

நீடித்து தொடரட்டும் பஞ்சாபிகேசன் ஐயாவின் நாதஸ்வர இசை பாரம்பரியம்!!

# முன்னாள் எம்.பி. சில்வெஸ்டர் அலன்ரினின் இறுதிக் கிரியைகள் நேற்று நெடுந்தீவில்!

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் மூத்த உறுப்பினரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்ரர் அலன்ரினின் இறுதிக் கிரியைகள் இன்று நெடுந்தீவில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றது.

அன்னாரின் குடும்ப உறுப்பினர்கள், அரசியல் கட்சி பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு தமது இறுதி மரியாதையைச் செலுத்தினர்.

இதன்போது ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் அஞ்சலிச் செய்தியும் வாசிக்கப்பட்டது.

மாரடைப்பு காரணமாக 52 வயதில் சில்வேஸ்ரர் அலன்ரின் உயிரிழந்தார்.

2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆண்டு வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினராக இவர் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# தமிழகத்தை குடிகார மாநிலமாக மாற்றியுள்ளனர்: அண்ணாமலை

“தமிழகத்தை குடிகார மாநிலமாக மாற்றியுள்ளனர். தரவுகள் வழங்க வேண்டும் என்பதால் நீட் தேர்வு விவகாரத்தில் உச்சநீதிமன்றம் செல்ல மறுக்கின்றனர்.”

- இவ்வாறு தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை குற்றம்சாட்டியுள்ளார்.

பா.ஜ.க. சார்பில் கோவை மக்களவை தொகுதி ஆய்வு கூட்டம் அவிநாசி சாலையில் உள்ள திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. இதில் பங்கேற்ற தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை செய்தியாளர்களிடம் பேசுகையில்,

“தமிழகம் முழுவதும் பா.ஜ.க. போட்டியிட்ட இடங்களில் கட்சி செயல்பாட்டை ஆய்வு செய்ய முன்னாள் மத்திய இணை அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் வந்துள்ளார். வேட்பாளராக போட்டியிட்டதால் நானும் வந்துள்ளேன். ஆறு சட்டப்பேரவை தொகுதிகளில் உள்ள பொறுப்பாளர்களை சந்தித்துள்ளோம். அடுத்த தேர்தலுக்கு தயாராவது, கடந்த தேர்தலில் தோல்விக்கான காரணத்தை ஆராயும் பணிகள் உள்ளிட்டவை மேற்கொள்ளப்பட்டன.

சட்டப்பேரவையில் அமைச்சர் துரைமுருகன் கூறியதை சிலர் நகைச்சுவையாக பார்த்தாலும் நாங்கள் கள்ளக்குறிச்சி சென்ற போது டாஸ்மாக் மதுபான போதை போதவில்லை என்று தான் கள்ளச்சாராயத்தை நோக்கி செல்வதாக அங்குள்ளவர்கள் கூறினர். டாஸ்மாக் மதுபானத்தின் தரம் ஆய்வு செய்யப்படுகிறதா என்றால் கேள்விக்குறிதான்.

மூத்த அமைச்சரே அரசு வேலை செய்யவில்லை என சட்டப்பேரவையில் ஒப்புக்கொண்டுள்ளார். சென்னையில் சுகாதாரம் மிகவும் மோசமாக உள்ளது. அதை



பற்றி எல்லாம் சட்டப்பேரவையில் பேசுவதில்லை.

கள்ளச்சாராய உயிரிழப்பிற்கு தேடிச் சென்று ரூ.10 லட்சம் வழங்கும் நிலையில், தேர்தல் பணியில் ஈடுபட்ட காவலர்களுக்கு சிறப்பு ஊதியத்தை தமிழக அரசு வழங்கவில்லை. இது கண்டனத்துக்குரியது.

முதல்வரின் வெளிநாட்டு பயணம் தவறில்லை. இருப்பினும் அத்தகைய பயணங்களால் பெறப்பட்ட முதலீடுகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும். கள் விற்பனைக்கு அனுமதி அளிக்கவும் டாஸ்மாக் மதுபான கடைகள் எண்ணிக்கையை குறைக்கவும் வலியுறுத்தி வருகிறோம்.

தமிழகத்தை குடிகார மாநிலமாக மாற்றியுள்ளனர். தரவுகள் வழங்க வேண்டும் என்பதால் நீட் தேர்வு விவகாரத்தில் உச்சநீதிமன்றம் செல்ல மறுக்கின்றனர். மேகேதாட்டு விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் கட்சி எம்.எல்.ஏக்கள், மூத்த தலைவர்கள், கர்நாடக முதல்வர் சித்தராமையாவை ஏன் நேரில் சென்று சந்திப்பதில்லை.”- என்றார்.

# மம்தாவை எச்சரித்த ஆளுநர்; மேற்கு வங்கத்தில் பரபரப்பு

மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி தன்னைச் சீண்டவோ பயமுறுத்தவோ முடியாது என அம்மாநில ஆளுநர் ஆனந்தா போஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி தலைமைச் செயலகத்தில் நடந்த நிர்வாகிகள் கூட்டத்தில் உரையாற்றிய மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, ‘சமீப காலங்களாக எழுந்துள்ள புகார்களால் ஆளுநர் மாளிகையான ராஜ் பவனுக்கு செல்லவே தங்களுக்கு பயமாக இருப்பதாக பெண்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்’ எனத் தெரிவித்திருந்தார்.

இக்கருத்தானது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில் தனது பெயருக்கு களங்கம் விளைவிப்பதாகக் கூறி மம்தா மீதும்,திரிணாமுல் காங்



கிரஸ் தலைவர்கள் மீதும் ஆனந்தா போஸ் கல்கத்தா உயர்நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த அவர்” மாநிலத்தின் முதல்வர் என்ற முறையில் மம்தாவை நான் மதிக்கிறேன். அதுபோல மம்தாவும் நாகரீகமான முறையில் பேச வேண்டியது அவசியம். யாரை வேண்டுமானாலும் சீண்டலாம் என்று அவர் நினைத்துக்கொண்டிருக்கிறார்.

மம்தா என்னை சீண்டவோ பயமுறுத்தவோ முடியாது. அந்த அளவுக்கு அவர் வளரவில்லை. எனது பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாது. நான் மம்தா என்ற தனி நபர் மீதே அவதூறு வழக்கு தொடர்ந்தேன். அந்த தனி நபர் முதலமைச்சராக உள்ளார் அவ்வளவுதான்” இவ்வாறு ஆனந்தா போஸ் தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதம் ராஜ் பவனில் பணிபுரிந்து வந்த பெண்ணொருவர், ஆளுநர் ஆனந்தா போஸ் தன்னிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டியிருந்த நிலையில் இதுதொடர்பாக கல்கத்தா பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நான்கு புதிய மாநகராட்சிகள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டன

## சட்டமூலம் நிறைவேற்றம்

தமிழகத்தில் திருவண்ணாமலை, நாமக்கல், காரைக்குடி, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கு தனித்தனியாக புதிய மாநகர சபையை உருவாக்குவதற்கான சட்டமூலம் திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது.

சட்டசபையில் புதுக்கோட்டை நகராட்சி மற்றும் 11 ஊராட்சிகளை ஒன்றிணைத்து புதுக்கோட்டை மாநகராட்சி, திருவண்ணாமலை நகராட்சி மற்றும் 18 ஊராட்சிகள், அடி அண்ணாமலையில் உள்ள பகுதிகள் ஆகிவற்றை ஒன்றிணைத்து திருவண்ணாமலை மாநகராட்சியாக பிரிக்கப்பட்டுள்ளது.

இதேபோல், நாமக்கல் நகராட்சி மற்றும் 12 ஊராட்சிகளை ஒன்றிணைத்து நாமக்கல் மாநகராட்சி, காரைக்குடி நகராட்சி மற்றும் இரண்டு பேரூராட்சிகள், ஐந்து ஊராட்சிகளை ஒன்றிணைத்து காரைக்குடி மாநகராட்சி என மொத்தம் 4 புதிய மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதற்கான சட்டமூலம் நேற்று தாக்கல் செய்யப்பட்டன.

இந்நிலையில் மாநகராட்சியை தரம் உயர்த்த தடையாக இருந்த மக்கள்தொகை, ஆண்டு வருமானத்தை தளர்த்தி திருத்தப்பட்ட சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது.

நகர்ப்புற உள்ளாட்சி சட்டப்பிரிவில் மக்கள் தொகை 3 லட்சத்தில் இருந்து 2 லட்சமாகவும், ஆண்டு வருமானம் 30 கோடி ரூபாவில் இருந்து 20 கோடி ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

# லேபர் கட்சி வெற்றிபெற்றால் பிரித்தானியா மீள முடியாத நெருக்கடிக்குள் தள்ளப்படும்

## பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் எச்சரிக்கை

லேபர் கட்சி ஆட்சிக்கு வந்தால் 100 நாள்களில் மீள முடியாத விளைவுகளை சந்திக்க நேரிடும் என பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இன்னும் மூன்று நாள்களில் பிரித்தானியாவில் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு அவர் இந்த எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லேபர் கட்சி ஆட்சிக்கு வந்ததும் வரி அதிகரிக்கும் எனவும், நமது வரிகள், எல்லைகள் மற்றும் நமது பாதுகாப்பை அவர்களிடம் ஒப்ப டைக்கக் கூடாது எனவும் வலியுத்தி யுள்ளார்.



அத்துடன், சட்டவிரோத புலம்பெயர்வோர் நாட்டுக்குள் அனுமதிக்கப்படுவார்கள் எனவும், பிரித்தானியத் தெருக்களில் அவர்களின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்படும் எனவும் பிரித்தானிய பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

லேபர் கட்சி ஆட்சிக்கு வருமாயின், முதல் 100 நாள்களில் பிரித்தானியாவை மீளமுடியாதொரு நெருக்கடிக்குள் தள்ளுவார்கள் என பிரதமர் ரிஷி சுனக் எச்சரித்துள்ளார்.

கன்சர்வேட்டிவ் கட்சியை விட, லேபர் கட்சி 20 புள்ளிகள் வித்தியாசத்தில் முன்னிலையில் இருப்பதாலும், வெளியான கருத்துக்கணிப்புகள் அனைத்தும் கன்சர்வேட்டிவ் கட்சிக்கு படு தோல்வியை சந்திக்க நேரிடும் எனவும் குறிப்பிட்டுள்ள நிலையில், ரிஷி சுனக் லேபர் கட்சியை இவ்வாறு விமர்சித்துள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

# ரஷ்யாவில் விடுதியில் பற்றிய தீ: வெளிநாட்டு தொழிலாளர்கள் பலி

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோ புறநகர்ப் பகுதியான பாலாஷிகா நகரில் உள்ள ஒரு தங்கும் விடுதியில், வெளிநாடுகளைச் சேர்ந்த புலம்பெயர் தொழிலாளர்கள் பலர் தங்கியிருந்த விடுதியில் நேற்று முன்தினம் திடீரென தீப்பிடித்ததில் ஐவர் கருகி உயிரிழந்துள்ளனர்.

இந்த கட்டடத்தில் பற்றிய தீ பின்னர் மளமளவென கட்டிடத்தின் ஏனைய பகுதிகளுக்கும் வேகமாக பரவியது. இதனால் அந்த பகுதி முழுவதும் கரும்புகை மண்டலமாக காட்சி அளித்தது.

கட்டடத்தில் தீப்பிடித்ததால் மாடியில் தங்கி இருந்த பலரும் உயிர் பயத்தில் ஜன்னல் வழியாக குதித்தனர். இதில் சிலருக்கு படுகாயம் ஏற்பட்டது.





தகவலின் பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் அங்கு சென்று தண்ணீரை பாய்ச்சி தீயை அணைக்க முயன்றனர். அவர்களது சில மணி நேர போராட்டத்துக்கு பின்னர் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

மற்றொருபுறம் அந்த விடுதியில் சிக்கியவர்களை மீட்கும் பணியும் நடைபெற்றது. அதன்படி ஏணி மூலம் மீட்பு படையினர் ஏறிச்சென்று அங்கிருந்தவர்களை பத்திரமாக மீட்டனர்.

எனினும் இந்த சம்பவத்தில் 5 பேர் உடல் கருகி பலியாகினர். சிலர் காயமடைந்தனர். இதுகுறித்து பொலிஸார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்திவருகின்றனர். மின்கசிவு காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

# மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் பிரித்தானிய மன்னரின் தங்கை இளவரசி ஆன்





பிரித்தானிய மன்னரின் தங்கையான இளவரசி ஆன் தனது குதிரைகளில் ஒன்றால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இந்த நிலையில், அவர் நேற்று முன்தினம் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டு Gatcombe Park இல் அமைந்துள்ள தனது வீட்டிற்கு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரித்தானிய மன்னர் சார்லசின் தங்கையான இளவரசி ஆன், கடந்த ஞாயிற்றுக்கிழமை தனது குதிரைகளில் ஒன்றால் தாக்கப்பட்டுள்ளார்.

இதன்போது அவருக்கு தலையில் அதிகபடியான தாக்கம் ஏற்பட்டதால் concussion என்னும் பிரச்சினை ஏற்பட்டு ஞாபக மறதியாலும் அவர் பாதிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியானது.

மேலும், மருத்துவர்களின் ஆலோசனையின்படி, அவர் பங்கேற்க இருந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

மன்னர் சார்லசும் இளவரசி கேட்டும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, 73 வயதிலும், ஏராளமான பொறுப்புகளை ஏற்றுக்கொண்டு பரபரப்பாக இயங்கிவந்தார் இளவரசி ஆன் என்பது குறிப்பிடத்தக்கது.




# இந்தியா - ரணிலின் கூட்டுத் தயாரிப்பே தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற நாடகம்

## மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் காட்டம்

(கனகராசா சரவணன்)

இந்த நாட்டின் ஒற்றையாட்சி அரசமைப்பை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்வதற்காக இந்தியாவும் ஜனாதிபதியும் சேர்ந்து மேற்கொள்ளும் கூட்டு தயாரிப்பே இந்த பொது வேட்பாளர் நாடகம். இந்த நாடகத்தின் நடிகர்களாக தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகளைச் சிதறடிக்கின்ற செயற்பாட்டை பணத்துக்காகச் செய்ய வந்த கதாபாத்திரங்கள் மூலம் பொது வேட்பாளர் என்ற நாடகம் முன்னெடுக்கப்படுகின்றது எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஷ் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தமிழர்கள் இந்தத் தீவில் தங்கள் இருப்பைத் தக்க வைப்பதற்காக கடந்த 75 வருடங்களாக ஜனநாயக ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் போராடி, 2009 பாரிய இனவழிப்புக்கு உட்படுத்தப்பட்டு, இன்று வரையும் எந்தவிதமான அரசியல் தீர்வும் இல்லாமல் நடுத் தெருவில் நிற்கின்றனர்.

மக்கள் தங்களது இருப்பைத் தக்கவைப்பதற்காகப் பல கோடிக்கணக்கான சொத்துக்களையும் பல லட்சம் உயிர்களையும் தியாகம் செய்து, நிலங்களை இழந்து, இன்று தெருத் தெருவாகப் போரட வேண்டிய நிர்ப்பந்தத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

சிங்கள மக்களுடன் சேர்ந்து வாழவேண்டுமாக இருந்தால் - அவர்களுக்கு உள்ள உரிமைகளை போன்று தமிழ் மக்களும் கௌரவத்துடன் வாழவேண்டுமாக இருந்தால், இலங்கையினுடைய ஒற்றையாட்சிக் கட்டமைப்பு நிராகரிக்கப்பட்டு, அது ஒரு சமஷ்டிக் கட்டமைப்பாக கொண்டுவரப்பட வேண்டும்.

ஆகவே தமிழ் மக்களின் தொடர்ச்சியான போராட்டம் சமஷ்டிக் கட்டமைப்புக்கானது.

இந்தியா தமிழ் மக்களைத் தனது தேச நலனுக்காகப் பகடைக்காயாக அடிமைப்படுத்தி வந்திருக்கின்றது. எனவே எங்கள் மக்களின் நலன்களுக்காக இந்த தீவில் ஒரு சமஷ்டிக் கட்டமைப்பை கொண்டுவர இந்தியா இலங்கைக்கும் சர்வ தேசத்திற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அதைவிடுத்து, மாறாக, தங்களது நலன்களைக் கருத்தில் கொண்டு இலங்கையின் ஆட்சியாளர்களை (ஜனாதிபதியை) கொண்டுவருவதற்காக தமிழ் மக்களைப் பகடைக்காயாக பயன்படுத்தி அது வந்துள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் தங்களின் நலனை கருத்தில் கொண்டு, தமிழ் மக்கள் குறித்து எந்தவிதமான கரிசனையும் கொள்ளாது, இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் விளைவாகத் திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தசட்டத்தை திரும்பவும் திணிப்பதற்காக - தமிழர்களை அடிமையாக பயன்படுத்துவற்காக - பல திட்டங்களை அது தீட்டிவருகின்றது. அதுவே இன்று பொதுவேட்பாளரைக் களமிறக்கும் முயற்சி.

இது இந்தியா - ரணிலின் கூட்டு நரித்தனமான வேலை. இதற்கு பல நபர்களை ஒருங்கிணைத்து, பணத்தை வழங்கி, பொதுவேட்பாளர் என்ற நாடகத்தை அரங்கேற்றி, தமிழ் மக்கள் மீது நம்பிக்கை ஏற்படுத்தும் விதமாக செயற்படுத்தப்படுகின்றது.

தமிழர்களை பொறுத்தமட்டில் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் இருந்த காலத்தில் கூட பொது வேட்பாளரை எந்தச் சந்தர்பத்திலும் நிறுத்தியது கிடையாது. மாறாக, அவர்கள் தேர்தலை நிராகரித்துள்ளனர்.

எங்களைப் பொறுத்தளவில் தேர்தலில் வாக்களிப்பதும் நிராகரிப்பதும் ஒரு ஜனநாயகப் பண்பு. அதனடிப்படையில் வடக்கு கிழக்கில் தமிழர்களாகிய நாங்கள் நிகாரிக்க வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடந்த 3 மாங்களுக்கு முன் தெரிவித்துவந்தோம்.

தேர்தல் பகிஷ்கரிப்பின் மூலம்தான் நாங்கள் இந்தியா போன்ற நாடுகளுக்கு பாடம் புகட்டமுடியும். இதற்கு மாறாக இந்த பகிஸ்ஹற்கரிப்பு விடயத்தை நீர்த்துப் போகவைப்பதற்காக இந்தப் பொது வேட்பாளர் நாடகத்தை அரங்கேற்றி வருகின்றனர் என்பதில் மக்கள் தெளிவாக இருக்கின்றனர்.

இந்த பொது வேட்பாளர் விடயம் ஒற்றையாட்சி அரசமைப்பைத் தமிழர்களை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கான நாடகமாக பார்க்கின்றோம். அது மக்களுக்கு வெளிபடையக தெரியும். மக்கள் இந்த விடயத்தில் மிக அவதானமாக இருப்பார்கள். நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழர்கள் வாக்களிக்க வாக்குச்சாவடிக்குப் போகமாட்டார்கள். அது மக்களுடைய வரலாற்று ரீதியான கடமை. அதே நேரத்தில் ஜனநாயகப் பண்பு. - என்றார்.




# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று சர்வதேச நீதி கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(கே.வசந்தன்)

காணாமலாக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி கோரி வவுனியாவில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் சங்கத்தால் பழைய பஸ் நிலையம் முன்பாக நேற்று இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் “எமக்கு சர்வதேச நீதியே வேண்டும்“, “எங்கே, எங்கே பிள்ளைகள் எங்கே?“, “ஓஎம்பி அலுவலகம் எமக்கு வேண்டாம்“, “கையில் கொடுத்த பிள்ளைகளுக்கு மரண சான்றிதழ் எதற்கு?, நாம் இழப்பீட்டைக் கோரவில்லை, கையில் தந்த எமது சிறுவர்கள் எங்கே?“ என எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தமையுடன் கோசங்களையும் எழுப்பியிருந்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த வவுனியா மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோர் சங்க தலைவி ஜெனீற்றா –

எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? சர்வதேச நீதியே எமக்கு வேண்டும். ஓம்எம்பி அலுவலகம் எமக்கு தேவையில்லை எனக் கூறிய போதும் அதனை இரகசியமாக எமது பகுதிகளில் நிறுவியுள்ளார்கள். தற்போதைய ஜனாதிபதி ரணில் கிராம அலுவலர் ஊடாக ஒஎம்பி அலுவலகத்தின் வேலைகளௌள முன்னெடுத்துள்ளார். வாழ்வாதார உதவிகளை வழங்கி, எமது போராட்டத்தை மழுங்கடிக்க முற்படுகிறார்கள். இது தொடர்பில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் விழிப்பாக இருக்க வேண்டும். எமக்கு நீதி வேண்டும். உயிர் உள்ளவரை நீதிக்காக நாம் போராடுவோம். – எனத் தெரிவித்தார்.























# தம்மிக பெரேரா தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் வடக்கில் அங்கஜனின் அமைப்புடன் இணைந்து சான்றிதழ் வழங்கல்

My Dream Academy - DP Education IT Campus ஆகியன இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுத்துள்ள உழனைபெ கற்கை நெறி கற்கைகளை கற்கும் மாணவர்களுக்கான தரச்சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் முற்றவெளி அரங்கில் இடம்பெற்றது.

DP EDUCATION நிறுவன ஸ்தாபகரும், தலைவருமான, நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா, ஆலனசநயஅ யஉயனநஅல நிறுவுனரும், நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் பங்கேற்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 3,000 மாணவர்கள் தமக்கான திறமைச்சான்றிதழ்களை பெற்றுக்கொண்டார்கள்.

யாழ்ப்பாண மாவட்டத்தின் கல்விப்பாரம்பரியத்தின் புதிய அத்தியாய தொடக்கமாக இந்நிகழ்வு அமைவதோடு, தகவல் தொழில்நுட்பக் கல்வியை முற்றிலும் இலவசமாக எமது இளையோருக்கு கொடுப்பதன் ஊடாக, தொழில்நுட்பப் புரட்சியொன்றை எம்மண்ணில் ஏற்படுத்துவதே My Dream Academy இன் நோக்கமாக உள்ளது. அத்துடன் நாடுமுழுவதும் மில்லியன் கணக்கான கோடிங் மென்பொருள் வல்லுநர்களை உருவாக்கும் நோக்கில் DP Education இப்பணிகளை முன்னெடுத்து வருகிறது.

நாடுமுழுவதும் DP Education நிறுவனத்தால் முன்னெடுக்கப்படும் IT campus செயற்றிட்டங்கள், யாழ் மாவட்டத்தில் என் கனவு யாழ் அறக்கட்டளையின் my dream academy உடன் இணைந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன்படி, நல்லூர், புத்தூர், வல்வெட்டி, நெல்லியடி, தெல்லிப்பழை, சுன்னாகம், வட்டுக்கோட்டை, சாவகச்சேரி ஆகிய பிரதேசங்களில் இக்கற்கை நெறிகள் முற்றிலும் இலவசமாக கற்பிக்கப்படுகின்றன.

இந்நிகழ்வில் சான்றிதழ் பெற வந்த பிள்ளைகளுக்கு அவர்களுடைய பெற்றோர்களின் கையால் சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




















# பல்கலை அனுமதிக்கு மாவட்ட கோட்டாமுறையில் தங்குயிருக்க வேண்டிய இக்கட்டு நம் மாணவருக்கு

## நேற்றைய நிகழ்வில் அங்கஜன் எம்.பி. ஆதங்கம்

(த.சுபேசன்)

மாவட்ட கோட்டாமுறை இல்லாவிட்டால் எமது பிள்ளைகள் பலர் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலைமை ஏற்படும் என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் நாடாளு மன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற கணணிக்கற்கை நெறி மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –

வடக்கு மாகாணக் கல்வியின் அடையாளமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பொது நூலகம் ஆகியன விளங்குகின்றன.

கல்வியில் சிறந்து விளங்கிய நாம் சில காரணங்களால் கல்வியில் வீழ்ச்சியைக் கண்டோம்.

தற்போது அந்த வீழ்ச்சியில் இருந்து மீள பல முயற்சிகளை எடுத்து வருகிறோம்.

அண்மையில் வெளியாகியுள்ள க.பொத.உயர்தர மற்றும் சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் நம்பிக்கை அளிப்பன வாகக் கூறினாலும்–

பல்கலைக்கழக அனுமதியின் போது மாவட்ட ஒதுக்கீடு இல்லாவிட்டால் எமது பிள்ளைகள் பலர் பல்கலைக்கழகம் செல்ல முடியாத நிலைமை ஏற்படும்.

பல்கலைக்கழக அனுமதியின் போது திறமை அடிப்படையிலான கோட்டா முறைமை போதும், மாவட்ட கோட்டா முறைமை வேண்டாம் என்று கோரிய நாம் இன்று மாவட்ட கோட்டா இல்லையேல் பல்கலைக்கழகம் செல்லும் தொகை குறைவடையும் நிலையில் உள்ளோம்.

உயர்தரத்தில் தகவல் தொழில்நுட்ப கற்கைகளை எமது மாணவர்கள் தெரிவு செய்வதன் ஊடாக அதிக சற் புள்ளிகளைப் பெற்று பல்கலைக்கழகத்திற்கான வாய்ப்புக்களை அதிகரித்துக்கொள்ள முடியும். அதன் முயற்சியாகவே டி.பி. எடியுகேசனுடன் இணைந்து “என் கனவு” யாழ் அறக்கட்டளை யாழ்ப்பாண மாவட்ட மாணவர்கள் மத்தியில் தொழில்நுட்ப அறிவு மற்றும் கணணி அறிவை வளர்த்து வருகிறது. – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# ஓமந்தையில் புதையல் தோண்ட முற்பட்ட பூசாரி உட்பட ஐவர் பொலிஸாரால் கைது



(கே.வசந்தன்)

ஓமந்தை, விளாத்திக்குளம் பகுதியில. வைத்து புதையல் தோண்ட முற்பட்டவர்கள் என்று கருதப்படும் பூசாரி உட்பட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, ஓமந்தைப் பொலிஸாருக்குக் கிடைத்த விசேட தகவலையடுத்தே விளாத்திக்குளம் பகுதியில் இரவு விசேட கண்காணிப்பு நடவடிகையில் ஈடுபட்ட பொலிஸாரால் புதையல் தோண்டுவதற்கு முற்பட்ட 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கண்டி பகுதியில் இருந்து வருகை தந்த பூசாரி மற்றும் வவுனியாவின் தவசிகுளம், ஓமந்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நால்வருமாக 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின் இந்த 5 பேரையும் வவுனியா நீதிமன்றில முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஊசிக்குப் பயந்து ஆஸ்பத்திரியில் இருந்து தப்பியவர் விபத்தில் சிக்கி வீதியில் மரணம்

## வவுனியாவில் சனிக்கிழமை இரவு சம்பவம்





(கே.வசந்தன்)

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் அங்கிருந்து தப்பிச் சென்றவர் வீதியில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் வாகன விபத்தில் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

வவுனியா, கோவில்புதுக்குளம், ராணிமில் வீதி சந்திப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இவரின் சடலம் மீட்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருந்த வவுனியா, ஆச்சிபுரம் பகுதியைச் சேர்ந்த லியோ சியஸ் டெல்சன் என்பவர் வைத்தியசாலையில் ஊசி போடுவதற்கு பயந்து வைத்தியசாலையில் இருந்து விடுகை பெறாது இரவு தப்பி வீடு நோக்கிச் சென்றுள்ளார்.

இந்நிலையில் வவுனியா, கோவில்புதுக்குளம், ராணிமில் சந்தியில் மரணமடைந்த ஒருவரின் சடலம் இருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து அங்கு சென்ற பொலிஸார் அச்சடலத்தை மீட்டனர். வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸெ தெரிவித்தனர்.

வீதியால் சென்ற வாகனம் இந்த நபர் மீது மோதி விபத்தை ஏறடபடுத்தி விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. தொடர்ந்தும் வவுனியா பொலிஸார் மற்றும் போக்குவரத்துப் பொலிஸார் ஆகியோர் இது குறித்த மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# காதலிக்குப் பயம் காட்ட கழுத்தில் கயிற்றை மாட்டிய இளைஞன் கயிறு இறுகி மரணம் வவுனியாவில் துயரம்

(கே.வசந்தன்)

வவுனியா, நந்திமித்திரகம பகுதியில் வசிக்கும் இளைஞர் ஒருவர் காதலிக்குப் பயம் காட்ட கழுத்தில் கயிற்றை மாட்டிய நிலையில் அது இறுகியதால் மரணமடைந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன் வவுனியா போகஸ்வேவ பகுதியைச் சேர்ந்த 17 வயது இளைஞன் ஒருவரைக் காணவில்லை என மாமடுப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் அந்த இளைஞன் நேற்றைய தினம் தூக்கிட்டு மரணித்த நிலையில் நந்திமித்திரகம பகுதியில் கண்டு பிடிக்கப்பட்டார். தனது 15 வயதுக் காதலியை மிரட்டுவதற்காக கழுத்தில் கயிற்றை மாட்டிய நிலையில் அந்தக் கயிறு இறுகி மரணித்துள்ளார் என பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



வவுனியா வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட இளைஞனின் சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாமடுவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





# 2 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதி திருட்டு நகைகளுடன் புத்தளத்தில் மூவர் சிக்கினர்

(ரஸீன் ரஸ்மின்)

வடமேல் மாகாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் திருடப்பட்டவை எனத் தெரிவிக்கப்படும் தங்க நகைகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தங்க நகைகள் 2 கோடியே 50 லட்சம் ரூபாவுக்கும் அதிக பெறுமதியுடையவை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கடந்த சில மாதங்களாக இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் பின்னரே சந்தேக நபர்கள் மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை நீதிமன்றத்தின் உத்தரவில் தடுத்துவைத்து விசாணைக்கு உட்படுத்திய போதே திருடப்பட்ட தங்க நகைகள் தொடர்பில் தகவல் வெளிப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நுரைச்சோலை, நாகொல்லாகம, தொரடியாவ, தெதிகம, கொஸ்வத்த ஆகிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள வீடுகள் மற்றும் வியாபார நிலையங்களில் இவ்வாறு தங்க நகைகளை திருடியுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு திருடப்பட்ட தங்க நகைகள் கண்டி, குருநாகல், கட்டுகஸ்தோட்டை, கேகாலை ஆகிய பகுதிகளில் உள்ள அடகு கடைகளில் அடகு வைக்கப்பட்டிருந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## நீண்ட காலமாகப் பாடசாலை மாணவர்களுக்கு

# கேரள கஞ்சாவினை சூட்சுமமாக விற்பனை செய்து வந்தவர் கைது!












நீண்ட காலமாகப் பாடசாலை மாணவர்களுக்கு கேரள கஞ்சாவைச் சூட்சுமமாக விற்பனை செய்து வந்த குடும்பஸ்தரை பெரிய நீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மருதமுனை மக்பூலியா பகுதியில் நேற்று இரவு கேரளா கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக கிடைக்கப் பெற்ற தகவல் ஒன்றைப் பின்தொடர்ந்து பொலிஸார் பெரும் சிரமத்திற்கு மத்தியில் சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் 36 வயதுடைய குடும்பஸ்தர் எனத் தெரிவிக்கப்பட்டது. அவர் வசம் இருந்து 11,100 மில்லி கிராம் கேரளா கஞ்சாவைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜே.எஸ். கே.வீரசிங்க தலைமையிலான பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.




# வெற்றிலைச் செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை!

ஏற்றுமதிக்கான வெற்றிலை பயிர்ச்செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தை மையப்படுத்தி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான நவீன தொழில்நுட்பத்தைப் பெற்றுகொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




# எதிர்வரும் 16ஆம் திகதி முதல் குறைவடையும் மின் கட்டணம்

எதிர்வரும் 16ஆம் திகதி முதல் மின் கட்டணத்தைக் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விலைத்திருத்தத்தில் மேற்கொள்ளப்படும் மாற்றம் தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் 15 ஆம் திகதி அறிவிக்கப்படும் எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மின் கட்டண குறைப்புத் தொடர்பில் மக்கள் எழுத்து மூலம் யோசனைகளை முன்வைக்கும் காலம் எதிர்வரும் 8ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.





# இணைய நிதி மோசடிக் குற்றச்சாட்டில் கைதான சீனப் பிரஜைகள் 31 பேருக்கும் விளக்கமறியல்!

இணைய நிதி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நீர்கொழும்பு பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட 31 சீன பிரஜைகளும் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு நீதிவான் முன்னிலையில் நேற்று முன் தினம் பிற்பகல் அவர் ஆஜர்ப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இணையத்தை பயன்படுத்தி நிதி மோசடியில் ஈடுபட்ட தாகக் கூறப்படும் 200 இற்கும் அதிக வெளிநாட்டவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குற்றப்புலனாய்வுப் பிரி வினரால் கைது செய்யப்பட்டனர்.

சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான், நேபாளம் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோசடி செய்யப்பட்ட நிதியானது பிரித்தானியா, துபாய், இந்தியா உள்ளிட்ட நாடுகளின் வங்கிகளில் உள்ள கணக் குகளுக்கு மாற்றப்பட்டுள்ளன எனக் குற்றப்புலனாய்வுப் பிரிவு மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.



# நெல் மூடைகளுடன் சென்ற லொறி பதையை விட்டு விலகி தடம் புரள்வு

## புனாணை தொழிநுட்ப பல்கலைக்கு முன்பாக விபத்து

(எம்.ஏ.ஏ.அக்தார்)

நெல் மூடைகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று விபத் துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புணானை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்திற்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

காத்தான்குடி பகுதியிலிருந்து பொலன்னறுவை நோக்கி நெல் மூடைகளை ஏற்றி சென்ற லொறி ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

எதிரே வந்த வாகனம் ஒன்றுக்கு வழி விடும்போது லொறி பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள் ளது.



விபத்தில் லொறிக்கு சேதமேற்பட்டுள்ளது. ஆயினும் லொறியில் பயணித்த சாரதியும் நடத்துனரும் காயங் களின்றித் தப்பியுள்ளனர்.









# பதுளை - கொழும்பு இடையே மலையக ரயில் சேவை பாதிப்பு

ரயில் ஒன்று தடம் புரண்டதால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் மாலை 06.30 மணியளவில் பதுளை ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த அஞ்சல் ரயில் சேவை, கலபடை மற்றும் இகுருஓயா ரயில் நிலையங்களுக்கு இடையில் தடம் புரண்டதாக ரயில்வேத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 1.15 மணியளவில் ரயில் தடம் புரண்டுள்ள நிலையில், இதனால் அந்த மார்க்கத்தில் செல்லும் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் இரண்டு குறுகிய தூர ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன எனவும், தற்போது சீரமைப்பு பணிகள் நடைபெற்று வருகின்றன எனவும் நாவலப்பிட்டி ரயில்வே திணைக்கள அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார்.








# பொதுப் போக்குவரத்தை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கும் அதிவிசேட வர்த்தமானி வெளியானது!

பொதுப் போக்குவரத்து சேவைகள் மற்றும் போக்குவரத்து சேவைகளுக்கான வசதிகளை வழங்குதல் மற்றும் பராமரித்தல் உள்ளிட்டவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொதுச்சேவை சட்டத்தின் பிரிவு 2 இன் கீழ் ஜனாதிபதிக்கு உள்ள அதிகாரங்களுக்கு அமைவாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, பயணிகள் அல்லது பொருள்களின் போக்குவரத்திற்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகள், வீதிகள், பாலங்கள், ரயில் பாதைகள் ஊடான போக்குவரத்து மற்றும் அதன் பராமரிப்பு ஆகியனவும் அத்தியாவசிய சேவைகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் முதல் அமுலாகும் வகையில், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் இந்த அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.




# ஆளுநர்கள் சட்டவிரோதமாக நியமனங்களை செய்கின்றனர் எனக் குற்றஞ்சாட்டுகிறார் சஜித்

மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ள வேளையில், ஆளுநர்கள் சட்டவிரோத அரசியல் நியமனங்களை மேற்கொண்டு வருகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ், 273ஆவது கட்டமாக வத்தளை பகுதியிலுள்ள பாடசாலையொன்றுக்கு 1,200,000ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்களை வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“ரூபாவிற்கும் டொலர்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் நாட்டில் உள்ள அனைவரும் அரசியல் மயப்படாமல் செயற்பட வேண்டும். தென் மாகாண ஆளுநர் சட்டவிரோதமான அரசியல் நியமனங்களை மேற்கொண்டு வருகிறார்.

தேர்தலை நடத்தாமல் தடம்புரளும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஆளுநரின் கடிதத்தின் மூலம், தமது அடிவருடிகளை நியமிக்கும் செயற்பாடுகள் தென் மாகாணத்தில் இடம்பெற்று வருகிறது. ஆளுநர்கள் இவ்வாறான



தவறுகளை மேற்கொள்ளக்கூடாது.

இத்தகைய சட்டவிரோத நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள ஆளுநர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தி அமைக்கும் அரசாங்கத்தில் நீதிமன்றில் சாட்சியமளிக்க வேண்டிய நிலை ஏற்படும்.”– என்றார்.











# இன்றைய ராசி பலன்கள் - 01.07.2024




இன்று மந்தமான நாளாக இருந்த போதிலும் யதார்த்தமான நடைமுறையை பின்பற்றினால் உங்கள் இலக்குகளை அடையலாம். சோர்வை விரட்டியடிப்பதன் மூலம் உங்களை நீங்கள் மகிழ்ச்சியாக வைத்திருக்கலாம்.

பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். சவாலான சூழ்நிலைகளை சமாளிக்க வேண்டியிருக்கும்.

தம்பதிக்குள் சலசலப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனால் நல்லுறவு பாதிக்கப்படும்.

இன்று பணப்புழக்கம் அதிகமாக இருக்காது. மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாதது.




இன்று இழப்புகள் ஏற்படலாம். எனவே பெரிய அளவில் சிந்திப்பதோ அல்லது பெரிய முடிவுகளை எடுப்பதோ கூடாது. பொறுமையும் உறுதியும் கடைபிடிக்க வேண்டிய நாள்.

நேர்மறையான எண்ணத்துடனும் ரிலாக்ஸ்டாகவும் வேலை செய்ய வேண்டும். இல்லையெனில் நீங்கள் செய்யும் வேலையில் உங்களுக்கு திருப்தி கிடைக்காது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. இன்று நீங்கள் உணர்ச்சிகரமாக செயல்படுவீர்கள். திருமணம் பற்றிய முடிவெடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல.

இன்று பணப் பற்றாக்குறை காணப்படும். என்றாலும் இருக்கும் பணத்தில் சேமிக்க முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். கால்களில் அழுத்தமும் வலியும் காணப்படலாம்.




உங்கள் ஆசைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு உங்கள் சுய வளர்ச்சியில் கவனம் செலுத்த வேண்டும். உங்கள் வளர்ச்சிக்கான வாய்ப்பு இன்று காணப்படுகின்றது.

இன்று வேலை பளு அதிகமாகக் காணப்படும். அதை சரிகட்ட முறையாக திட்டமிட்டு பணிகளை செய்ய வேண்டியது அவசியம்.

உங்களுக்கு பிரியமானவர் இன்று குழப்பத்தில் இருப்பதாக உணர்வீர்கள். அதனால் உறவில் கருத்து வேறுபாடும் பிரிவினையும் காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இல்லை. இழப்புகளைத் தவிர்க்க கட்டுப்பாட்டுடன் பணத்தை நிர்வகிக்க வேண்டும். ஆரோக்கியம் சுமாராக இருக்கும். குறித்த நேரத்தில் உணவு அருந்துவதன் மூலம் ஜீரணக் கோளாறுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.




இன்று எந்தவொரு செயலையும் கவனமாகச் செய்ய வேண்டும். இன்று லாபம் ஏற்படலாம் அல்லது இழப்பும் ஏற்படலாம்.

இன்று சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வீர்கள். உங்களது தீர்மானமான முயற்சி மூலம் உங்களுக்கு அடுத்த நிலைக்கான பதவி உயர்வு சாத்தியமாகும்.

இன்று உங்கள் பிரியமானவருடன் நல்லுறவு கொண்டிருப்பீர்கள். இன்று திருமணம் செய்து கொள்வதறகான திட்டங்களை வகுப்பதற்கு உகந்த நாள்.

இன்று போதிய பணவரவு காணப்படும். உங்கள் வங்கி இருப்பு கணிசமாக உயரும். இன்று ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மன அழுத்தங்கள் இருக்காது.




நீங்கள் வெற்றிகரமாக செயலாற்ற திட்டமிடுதல் அவசியம். இன்று நீங்கள் பாதுகாப்பற்றவராக உணர்வீர்கள். அந்த உணர்வை தவிர்த்து நேர்மறை எண்ணத்தை மேற்கொள்வது அவசியம்.

இன்று பணியிடத்தில் எதிர்பாலின சகபணியாளர்களுடன் கவனமாக நடந்துகொள்ள வேண்டியது மிக முக்கியம். வேலையின் போது சில சிக்கல்களை சந்திக்க நேரிடலாம்.

இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். இன்று புத்துணர்ச்சியுடன் இருப்பீர்கள். உங்கள் சந்தோஷங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பணப்புழக்கம் சீராக இருக்கும். வரவும் செலவும் சேர்ந்து காணப்படும். நீங்கள் இன்று நல்ல ஆரோக்கியத்தை பராமரிக்க முடியும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதக மாக இல்லை. அதிர்ஷ்டத்தைவிட இன்று நீங்கள் உங்கள் உழைப்பின் மீது நம்பிக்கை வைத்து செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகளை இன்று எடுப்பதை தவிர்க்கவும்.

பணியிடத்தில் உங்களது மேலதிகாரியுடன் சில பிரச்சினைகள் உருவாகும். மேலதிகாரியிடமிருந்து உங்களது வேலைக்கான அங்கீகாரம் கிடைக்காது. அது உங்களுக்கு வருத்தத்தை உண்டாக்கும்.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங்கள் துணையிடம் குற்றம் காண்பீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. செலவினங்கள் அதிகமாக காணப்படும்.உங்கள் தாய் தந்தையரின் உடல் நிலை பற்றிய கவலை இருக்கும். அவர்களுக்காக செலவு செய்ய வேண்டியிருக்கும்.




பேசும் வார்த்தைகளில் எச்சரிக்கையும் நட்பான அனுகுமுறையும் மேற்கொண்டால் இன்றைய நாள் சமநிலையோடு இருக்கும். அதனால் அனைத்து விஷயங்களும் உங்களுக்கு சாதகமாக அமையும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். ஓய்வு கிடைப்பது கடினம். இன்றைய வேலை முறையை திட்டமிட்டு செய்யவும்.

இன்று நல்லுறவை பராமரிப்பது கடினம். உறவில் சில இடையூறுகள் காணப்படும்.

இன்று நிதிநிலைமை சாதகமாக இல்லை. செலவினங்கள் அதிகமாக காணப்படும். அதனால் வருத்தப்படுவீர்கள்.

இன்று நாள் முழுவதும் அசௌகரியமாக இருக்கும்.




இன்றைய நாள் சிறிது ஏமாற்றத்துடன் காணப்படும். உங்கள் லட்சியங்களை அடைவதில் தடைகள் காணப்படும்.

பணிச்சுமை அதிகமாக காணப்படும். திட்டமிட்டு நேரத்துடன் பணிசெய்வதன் மூலம் தவறுகளை தவிர்க்க முடியும்.

திருமணம் பற்றிய எண்ணம் இருந்தால் அதனை தள்ளிப் போடவும்.உங்கள் துணையுடன் கலந்தாலோசிக்க வேண்டியது அவசியம்.

இன்று பணப்புழக்கம் மிதமாகக் காணப்படும். பணத்தை தக்க வைத்துக்கொள்வது கடினமாக இருக்கும்.

உங்கள் வாழ்க்கைத் துணையின் உடல் நலத்திற்காக செலவுகள் செய்ய வேண்டியிருக்கும். அதனால் உங்களுக்கு கவலையாக இருக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 01.07.2024




இன்று எச்சரிக்கையுடன் இருக்க வேண்டிய நாள். உங்கள் இலக்குகளை அடைய போராட வேண்டியிருக்கும். பொறுமையும் அமைதியும் தேவை.

பணிகளில் சற்று பின்தங்கியிருப்பீர்கள். இதனால் உங்கள் மேலதிகாரிகளிடத்தில் நல்ல பெயரெடுக்கும் வாய்ப்பை இழப்பீர்கள்.

இன்று காதல் விவகாரங்களில் மிதமான பலன்களே கிட்டும். உங்கள் காதல் விவகாரங்களை வேறு ஒரு நாளுக்கு தள்ளிப் போடவும்.

உங்கள் தேவையை சமாளிக்க சிறிய அளவில் நீங்கள் கடன் வாங்க நேரிடலாம்.

எண்ணெய் பதார்த்தங்களை தவிர்க்கவும். தோல் எரிச்சலால் நீங்கள் அவதியுறலாம்.




இன்று உங்கள் வசதிகளை பெருக்கிக் கொள்ள நினைப்பீர்கள். இல்லத்தில் அமைதியை நிலைநாட்ட அல்லது அதிகரிக்க நடவடிக்கை எடுப்பீர்கள்.

உங்களின் கீழ் பணிபுரிவோர் செய்த தவறுக்கு நீங்கள் திட்டு வாங்க நேரிடலாம். மேற்கொண்டு அவர்களிடம் கவனமாக பழகுவதற்கு அது உதவிகரமாக இருக்கும்.

இன்று காதலர்களுக்குள் கருத்து வேறுபாடு காணப்படும். இது நீங்கள் தகவல் பரிமாற்றத்தில் செய்யும் சிக்கல்கள் காரணமாக ஏற்படலாம்.

இன்று நிதிநிலைமை லாபகரமானதாக இல்லை. வரவைவிட செலவு அதிகமாக காணப்படும். பணப் பிரச்சினையை சந்திக்க நேரிடும்.

உங்கள் மனதில் உள்ள பதற்றத்தின் காரணமாக தலைவலி உண்டாகலாம்.




உங்களுடைய உறுதியான முயற்சியின் மூலம் இன்றைய நாள் உங்களுக்கு அதிர்ஷ்டமன நாளாக அமையும்.

இன்று வெற்றியை சந்திப்பீர்கள். உங்கள் முயற்சிகளின் மூலம் பல சாதனைகளைச் செய்வீர்கள்.

தம்பதிக்குள் சலசலப்புகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை இழந்து காணப்படுவீர்கள். அதனால் நல்லுறவு பாதிக்கப்படும்.

இன்று காதல் விவகாரங்களுக்கு ஏற்ற நாள். இன்று நீங்கள் அற்புதமான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று நிதிநிலைமை சாதகமாக உள்ளது. குடும்ப விசேஷங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் இருக்கும் நீங்கள் இன்று சௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று உணர்ச்சிப் பூர்வமாக இருப்பதை விட்டுவிட்டு யதார்த்தமாக இருக்க வேண்டியது அவசியம். உங்களை பாதிக்கக்கூடிய எதிர்மறை எண்ணங்களுக்கு இடம் கொடுக்காதீர்கள்.

உங்கள் வேலை சம்பந்தமாக நீங்கள் பயணம் செய்ய நேரிடலாம். அது பயனுள்ளதாகவும் வெற்றிகரமாகவும் அமையும்.

இன்று காதல் விவகாரங்களுக்கு ஏற்ற நாள். இன்று நீங்கள் அற்புதமான விஷயங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று அதிர்ஷ்டமான நாள். நிறைய பணம் சம்பாதிப்பீர்கள். ஆன்மிக காரியங்களுக்கு பணத்தை பயன்படுத்துவீர்கள்.

தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும்.





